விலை ரூபா: 15.00
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 பங்குனி 07 ஞாயிற்றுக்கிழமை (21.03.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 92

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாந் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சிமெந்து

# அணிசேரா நாடுகள் எதிர்ப்பு

# பிரித்தானியா கடும் சீற்றம்

## ஆலோசனைக் குழு அமைக்க ஐ.நா.செயலருக்கு அதிகாரம் உண்டு

(லண்டன்)

இலங்கையில் நடைபெற்ற போர்க் குற்றங்கள் குறித்து ஆலோசனைக் குழு ஒன்றை அமைப்பது தொடர்பில் ஐ.நா. செயலாளர் நாயகம் மேற்கொண்ட முயற்சிகளுக்கு அணி சேரா நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்தது தொடர்பில் பிரித்தானியா தனது கவலையை வெளியிட்டுள்ளது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## ஓ.எல்.பரீட்சை முடிபுகள் ஏப்ரல் 2-ம் வாரத்தில்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் கடந்த 2009 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை முடிபுகள் ஏப்ரல் மாதம் 2 ஆம் வாரத்தில் வெளியிடப்படவுள்ளது.

சுமார் 4 ஆயிரம் பரீட்சை நிலையங்களில் இப் பரீட்சைக்குத் தோற்றிய 5 இலட்சத்து 45 ஆயிரம் பரீட்சார்த்திகளில் 3 இலட்சத்து 40 ஆயிரம் பாடசாலை பரீட்சார்த்திகளும் 2 இலட்சத்து 5 (16 ஆம் பக்கம் பார்க்க)

## பதவி விலகி ஆறு மாதங்களின் பின்னர் இராணுவ நீதிமன்றில் விசாரிக்க முடியாது

### சரத் பொன்சேகா கருத்து

(கொழும்பு)

தாம் பதவி விலகி ஆறு மாதங்களின் பின்னர் இராணுவ நீதிமன்ற விசாரணைகளுக்கு உட்படுத்த முடியாது என ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அவர் உயர் நீதிமன்றில் சமர்ப்பித்துள்ள தமது கைது மற்றும் தடுத்து வைப்புக்கு எதிரான மனுவிலேயே இதனைச் சுட்டிக்காட்டியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அவரைக் கைது செய்ய உத்தரவிடுவதற்கு அவரை விட உயர்ந்த தர இராணுவ அதிகாரி ஒருவர் (16 ஆம் பக்கம் பார்க்க)

## அனோமா பொன்சேகாவிடமும் குற்றப் புலனாய்வு விசாரிக்கும்

(கொழும்பு)

ஜெனரல் சரத் பொன்சேகாவின் பாரியார் அனோமா பொன்சேகாவிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை நடத்த உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அனோமா பொன்சேகாவிடம் வாக்கு மூலம் ஒன்றைப் பதிவு செய்ய வேண்டியுள்ளதாகக் குற்றப் (16 ஆம் பக்கம் பார்க்க)

## சனல்-4 க்கு சரத் தகவல் விசாரணை நடத்தப்படும்

(கொழும்பு)

பிரித்தானியாவின் சனல்-4 தொலைக்காட்சிக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியமை சம்பந்தமாக ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தேசிய பாதுகாப்புக்கான ஊடகத் தகவல் மையத்தின் பணிப்பாளர் லக்ஷ்மன் ஹுலுகல்ல தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் (15 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நாவுடனான உறவில் விரிசல் கிடையாது

### பாலித ஹோகன்ன உறுதி செய்கின்றார்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபைக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவில் பாதிப்புக்கள் ஏற்படாது என ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கை நிரந்தர பிரதிநிதி பாலித ஹோகன்ன தெரிவித்துள்ளார்.

நியூயோர்க்கில் வைத்து ஐ.பி.எஸ். இணையத்தளத்திற்கு வழங்கிய செவ்வி ஒன்றின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இலங்கையின் மனித உரிமை நிலைவரங்கள் தொடர்பில் ஆலோசனை வழங்கும் (16 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுத் தேர்தலுக்குப் பின்னரே ஐ.எம்.எப்பின் நிதி வழங்கும் முடிபு

### பேச்சாளர் யோசிகோ கமற்ரா தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் ஏற்படப் போகும் புதிய நாடாளுமன்றத்தின் திட்டங்களின் அடிப்படையில் மேலதிக நிதியுதவிகள் வழங்கப்படும் என சர்வதேச நாணய நிதியம் (ஐ.எம்.எப்.) தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அதன் பேச்சாளர் யோசிகோ கமற்ரா மேலும் தெரிவித்துள்ளதாவது,

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு வழங்கி வந்த நிதி உதவியின் மூன்றாவது தவணைப் பணம் (16 ஆம் பக்கம் பார்க்க)






## மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம்

### மீண்டும் யாழில்

20.03.2010 முதல் 25.03.2010 வரை மட்டுமே இருப்பார்.
பதிவுகளை உடன் மேற்கொள்ளவும்.
பதிவுக் கட்டணம் ரூபா: 250/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம்.நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு.ஆஸ்துமா ,மாதவிடாய்க் கோளாறுகள் ,வெள்ளை போடுதல், குழந்தைப் பேறின்மை ,வாதநோய், தலையிடி ,பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத் திறன் குறைவு ,கல்வியில் நாட்டம் குன்றிப் பயம் ,நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

Sexuel Disorders (ஆண்மை சக்தி குறைவு )(பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோ தத்துவ ரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

மானிப்பாய் வீதியிலிருந்து 'செல்வ மாளிகை'
(பழைய வலம்புரி காரியாலயம்)
இல.15 ,வெள்ளாந்தெரு ,யாழ்ப்பாணம் .
T.P.: 0719315664 , 0777569205

(சி-4686)

## கடை வாடகைக்கு

பலசரக்கு அல்லது வேறு பாவனைக்கு உகந்த பாதுகாப்பான கட்டிடம் (12X18 அடி) வாடகைக்கு உண்டு.
0777066487
சீனியர் லேன்,
யாழ்ப்பாணம்.

(910)

## விற்பனைக்குண்டு

எம்மிடம் வலம்புரிச் சங்கு விற்பனைக்குண்டு. நேரில் வந்து பார்வையிடலாம்.

தொடர்புகளுக்கு:-
077 4069974

(சி-4695)

## காணி விற்பனைக்கு

நவாலி தெற்கில் பாதையோரமாக கிணற்றுடன் 5 பர. 6.6 குளி காணி விற்பனைக்குண்டு. தேவையேற்படின் துண்டுகளாகப் பிரித்து விற்கப்படும்.

(911) தொடர்பு: 077 9676128

## மாபெரும் மலிவு விற்பனை

சித்திரைப் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு எமது நிறுவனத்தின் மாபெரும் மலிவு விற்பனை 20.03.2010இல் ஆரம்பமாகிறது. சகல விதமான புடைவை வகைகளையும் மிகவும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம். உடன் விரையுங்கள்.

**இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்ஸ்,**

105, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(சி-4755)

## STR COMPUTER SYSTEM

*384, Navalar Road, Nallur, Jaffna.* *Head Office 385, Galle Road, Colombo-06.*
*T.P.:021-222-4459, 0774192275 Fax: 222-4460*

## ENGLISH CLASSES

**Diploma in English**
*Grammar, Spoken, Reading, Writing, Listening, Speaking*
என்பன ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும்.
**Strat on 24.03.2010, Time:- 4.00-6.00 pm**

### FACILITIES

Insolvement Payment, Computer Uses, Comfortable Lecture Hall, Supporting Materal for Learning, Semester Exam and Result, Comfortable Class Time
**(Course Duration 4 Months, Course Fees 4000)**
**Certificate Will Be Provided By Indian's NICT**
**15 STUDENTS IN A BATCH**
(தொழில் புரிபவர்களுக்கான விசேட ஆங்கில வகுப்புக்களும் நடைபெறவுள்ளது)
வகுப்புகள் அனைத்தும் யாழ். நகரில் பிரபல ஆசிரியர்களால் கற்பிக்கப்படும்.

(C-4756)

கைலாச பிள்ளையார் கோவிலுக்கு அருகில்

## பாராளுமன்றத் தேர்தல் 2010
## சுயேட்சைக் குழு இல. 10
### யாழ்ப்பாண மாவட்டம்






X

(சி-4726)

இம்முறையாயினும் பாராளுமன்ற உறுப்புரிமையைப் பயனுள்ளதாக்குவோம்

## யாழ்ப்பாணம் வணிகர் கழகம் நடத்தும் மாபெரும் வர்த்தக கண்காட்சி 2010

இடம்: யாழ். வேம்படி மகளிர் கல்லூரி
யாழ். மத்திய கல்லூரி
காலம்: 27, 28,29 மார்ச் 2010 (சனி, ஞாயிறு, திங்கள்)

அனுமதி இலவசம்

அனைவரையும் கலந்து கொண்டு கண்காட்சியை பார்வையிடுவதோடு விசேட கழிவு விலையில் பொருட்களை கொள்முதல் செய்யும் சந்தர்ப்பத்தையும் பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மூன்று தினங்களும் மாலை 6.00 மணி தொடக்கம் 9.00 மணி வரை யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

(சி-4755)

## நாளை ஆரம்பமாகின்றது

## திருமறைக் கலாமன்றம்

தயாரித்து வழங்கும்
தவக்கால ஆற்றுகை

# வெள்ளியில் ஞாயிறு

(திருப்பாடுகளின் காட்சி)

காலம்: மார்ச் **22-28,2010** (திங்கள் முதல் ஞாயிறு வரை -7 நாள்களுக்கு)
நேரம்: மாலை 6.45 மணி (வெள்ளிக்கிழமை மட்டும் மாலை 7.30 மணி)
இடம்: திருமறைக் கலாமன்ற அரங்கு

பார்வையாளர்கள் ஆசனங்களுக்கான பதிவுகளை யாழ் திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் மேற்கொள்ளலாம்.

இறைமகனின் பாடுகளின் பயணத்தில் இணைந்திட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
T.P./ Fax :021 222 2393

திருமறைக் கலாமன்றம்

(சி-4697)

## Computer Express,BCHS

**ஆகிய இரண்டு நிறுவனங்களும் இணைந்து நடத்திய புலமைப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் கவனத்திற்கு**

தங்கள் நலன் கருதி, கணனிக் கற்கை நெறிகளுக்கான பதிவுகளை April 05வரை மேற்கொள்ளலாம்.

-நிர்வாகம்.

(சி-4754)

## ஐங்கரன் திருமண சேவை

மணமகள் தேவை

எங்களிடம் யாழ். இந்து உயர்குலம் U.K Citizen 31,33,37 வயது, Canada Citizen 33,34 வயது, Austerliya Citizen 34 வயது, Swiss Citizen 30,39 வயது, Germany Citizen 32,36 வயது ஆகிய மணமகன்மார் உள்ளனர். தகுந்த மணமகள்மாரை எதிர்பார்க்கின்றனர். 24 மணிநேர தொலைபேசி வசதி உண்டு. பதிவுக் கட்டணம் எதுவும் இல்லை.

தொடர்பு :- லண்டன் ஐங்கரன்
T.P No. 0044 7535384166
0044 7508295863
Fax No: 0044 2086720673
www.ayngaranwedding@yahoo.com

(C-4753)

# ஜெகோவாவின் சாட்சிகளின் ஒருநாள் விசேட மாநாடு

ஜெகோவாவின் சாட்சிகளுடைய "இன்னும் கொஞ்சம் காலமே மீந்திருக்கின்றது" என்னும் பொருள் கொண்ட ஒரு நாள் விசேட மாநாடு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.40 ற்கு வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இம் மாநாட்டில் பிற்பகல் 11.05 இற்கு உலகத்தை முழுமையாகப் பயன்படுத்தாமல் உங்கள் ஊழியத்தை முழுமையாக நிறைவேற்றுங்கள். முற்பகல் 11.35 இற்கு ஒப்புக் கொடுத்தலும் ஞானஸ்ஞானமும், பேச்சும் இடம்பெறும்.

பிற்பகல் 1.45 இற்கு காவற் கோபுர சுருக்கம், 2.55 இற்கு கொஞ்சக் காலமே மீந்திருக்கின்றது. இதை நீங்கள் எப்படிப் பயன்படுத்துவீர்கள் என்ற விசேட பேச்சும் இடம்பெறவுள்ளது. (2-3)

## 9 ஆவது ஆண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும்

நீர்வேலி ஸ்ரீ கணேசா அறநெறிப் பாடசாலையின் 9 ஆவது ஆண்டு விழாவும் பரிசளிப்பு வைபவமும் பாடசாலை அதிபர் நீர்வைமணி கு. தியாகராசக் குருக்கள் தலைமையில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 இற்கு பாடசாலை முன்றலில் நடைபெறும்.

இந்நிகழ்வில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் த. கோபாலகிருஷ்ணன் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிப்பார். மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (6)

## இந்துசாதனம் வெளிவந்துள்ளது

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினரால் வெளியிடப்படும் இந்துசாதனம் பங்குனிமாத இதழ் வெளிவந்துள்ளது.

பல்வேறு ஆன்மீக கட்டுரைகளைத் தாங்கி வந்திருக்கும் இவ்விதழில் காரைநகர் வாரிவளவுக் கற்பகப் பிள்ளையார் ஆலய வரலாறு, சமயம் ஒரு வாழ்வியல், சேக்கிழார் காட்டிய வணிகவியல், மனப்பக்குவம் பெறுவோம் உள்ளிட்ட ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (2-6)

# வாரம் ஒரு தகவல்

## உடும்புப் பிடி

"அந்த ஆள் அங்கே என்ன செய்து கொண்டிருக்கிறான்?"

"பொந்தில் கொண்டு போய்க் கையை விட்டுக் கொண்டிருக்கிறான்!"

"எதற்காக?"

"உடும்பு பிடிக்கிறதுக்காக."

"துணிச்சலான ஆள் போலத்தான் இருக்கு"

"ஆமாம்! அவன் உடும்பு பிடிக்கிறதில் ரொம்பக் கெட்டிக்காரன். அதே மாதிரி வலை, தூண்டில் எதுவுமில்லாமல் கையாலேயே மீன் பிடித்துவிடுவான்."

"சீனாவில் மீன் பிடிப்பதற்கு ஒரு பறவையை உபயோகப்படுத்துகிறார்களாம்."

"அது எப்படி?"

"அங்கே கடல்காகம் (Commorant) என்ற பறவையைப் பழக்கி அதைப் பயன்படுத்தி மீன் பிடிக்கிறார்களாம். அந்தப் பறவையின் கழுத்தில் ஒரு வளையத்தை மாட்டி விடுவார்கள். அந்தப் பறவை மீனைப் பிடித்துவிடும்.

கழுத்தில் வளையம் இருப்பதால் மீனை விழுங்க முடியாது. ஒரு மணி நேரத்தில் 150 மீனை இது நீருக்குள் குதித்து சுலபமாகப் பிடித்து விடுமாம். அது பிடிக்கப் பிடிக்க நாம மீனை எடுத்துப் போட்டுக் கொள்ள வேண்டியது ரொம்பச் சுலபமான வேலை."

"இதோ இருக்கிறானே இவனுக்கு எல்லாமே சுலபமான வேலைதான்"

"அதுசரி... அவன் என்ன ரொம்ப நேரமாக அந்தப் பொந்தில் உடும்பைத் தேடிக் கொண்டிருக்கிறான்."

"வாங்க கிட்டப் போய்ப் பார்க்கலாம்"

"ஏம்பா... ரொம்ப நேரமா உடும்பைத் தேடுற போல இருக்கு. அந்தப் பொந்தில இல்லப் போல. கிடைக்காவிட்டால் பரவாயில்லை. விட்டுட்டுவா வேற இடத்தில் பார்க்கலாம்."

"நான் எப்பவோ விட்டுவிட்டேன். இப்ப அந்த உடும்பு தான் என் கையைப் பிடித்துக் கொண்டு விடமாட்டேன் என்கிறது."

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# மூத்த பிரஜைகள் பேரவையின் வாழ்த்தி பாராட்டும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மூத்த பிரஜைகள் பேரவையின் மூத்த சமூக சேவையாளர் லயன். வல்லிபுரம் பரமசிவம் சமூக சேவையில் இணைந்து 25 ஆண்டுகள் நிறைவையும் 80 ஆவது அகவை நிறைவையும் லயன் சீமாட்டி சரஸ்வதி பரமசிவத்தின் 78 ஆவது அகவை நிறைவையும் வாழ்த்தி பாராட்டும் வைபவம் யாழ். மாவட்ட மூத்த பிரஜைகள் பேரவையின் ஏற்பாட்டில் நாளை திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு பேரவை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பேரவைத் தலைவர் ச. சிவகுமாரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த கழகங்கள், சங்கங்கள், ஆலயங்கள், சேவை ஸ்தாபனங்களின் தலைவர்கள் அவர்களது சமூகத் தொண்டுகளைப் பாராட்டியும், பிறந்த தின வாழ்த்துக்களையும் தெரிவிக்கவுள்ளார்கள். (2-6)

## பாதை போக்குவரத்து சீர்செய்யப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறைக்கும் காரைநகருக்கும் இடையில் கடல்வழிப் போக்குவரத்தில் ஈடுபட்ட பாதை இயந்திரம் பழுதடைந்து இருந்ததால் சிறிது காலம் சேவை தடைப்பட்டிருந்தது. அவ் இயந்திரம் திருத்தப்பட்டு மீளவும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரி தெரிவித்துள்ளார்.

இச்சேவையில் ஈடுபடுத்தப்பட்ட பாதை வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமானது என்பது குறிப்பிடத்தக்கது. (2-22)

## மஹோற்சவம்

சாவகச்சேரி நுணாவில் மத்தி வைரவர் கோவில் என வழங்கும் அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி கோவில் மஹோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளது.

மஹோற்சவத்தில் எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப 10 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் செவ்வாய்க்கிழமை மு.ப 11 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை 6 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது. (6)

## இராசி பலன்

21-03-2010
(பங்குனி 07, ஞாயிற்றுக்கிழமை)
சஷ்டி பின்னிரவு 3.36 மணிவரை
கார்த்திகை முற்பகல் 11.19 மணிவரை
இராகுகாலம் 4.47-6.17 மணிவரை
சுபநேரம் 9.17-10.47 மணிவரை
நவக்கிரி ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் தீர்த்தம், மானிப்பாய் மேற்கு அரசடிப் பிள்ளையார் கொடியேற்றம், சஷ்டி விரதம், ஐந்தாம் தவக்கால ஞாயிறு.

| | |
|---|---|
| மேடம் | கௌரவக்குறைவு, எடுத்த காரியம் தாமதமாகும், தனவிரயம், விவாதம். |
| இடபம் | ஆழ்ந்த சிந்தை, நண்பர்கள் சந்திப்பு, புதியபொருள் சேர்க்கை, சயன சுகம். |
| மிதுனம் | தந்தைவழி உறவு, உணர்ச்சி வசப்படல், சுபசெலவு, காரிய அலைச்சல். |
| கடகம் | தொழில் நன்மை, பெருமையடைதல், எடுத்த காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை. |
| சிங்கம் | சுபநிகழ்வு, அதிக பிரயாசை, ஆரோக்கியமான நிலை, நண்பர்கள் உதவி. |
| கன்னி | அச்சமான நிலை, திடீர் பயணம், சரீரப் பிரயாசை, ஆரோக்கியக்குறைவு. |
| துலாம் | மரியாதைக்குறைவு, தொழில் நன்மை, போசன சுகம், வாகன பயம். |
| விருச்சிகம் | அபூர்வ சந்திப்பு, குடும்ப மகிழ்ச்சி, எடுத்த காரியம் கைகூடும், பண வருவாய். |
| தனுசு | சத்துருஜெயம், தொழில் முன்னேற்றம், தேகநலன், தனதானிய சேர்க்கை. |
| மகரம் | வியாபார நன்மை, குடும்பக் கவலை, முயற்சி தாமதம், தனவிரயம். |
| கும்பம் | கல்வியில் ஆர்வம், தாய்வழி உறவு, வாகன சுகம், பயந்த சுபாவம். |
| மீனம் | வாக்கு மேன்மை, பிரயாண நன்மை, காரிய அனுகூலம், பொருள்சேர்க்கை. |

வளவன்

## நியமனம்

(யாழ்ப்பாணம்)



புத்தூரைச் சேர் ந்த தில்லையம்பல வாணர் விமலன் அண்மையில் யாழ். மாவட்ட நீதிபதி கௌரவ எ.பிறேமசங்கர் முன்னிலையில் யாழ்ப்பாண நீதி மற்றும் நிர்வாக மாவட்டத்திற்கான சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

இவர் புத்தூர் யா/ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியின் பழைய மாணவனும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் புவியியல் பாடத்தில் இளமாணி பட்டத்தையும் தொடர்ந்து இந்தியா மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் பொது நிர்வாக பாடத்தில் முதுகலைமாணி பட்டத்தையும் பெற்றுள்ளார்.

மேலும் பச்சிலைப்பள்ளி பளை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நிகழ்ச்சித்திட்ட உதவியாளராக கடமையாற்றி வருவதுடன் இந்தியா, திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் சமூக வேலை (Social work) துறையில் கலாநிதி பட்டத்திற்கான ஆய்வினை மேற்கொண்டு வருகின்றார்.

அத்துடன் இலங்கை செஞ்சிலுவைச் சங்க கோப்பாய் கிளையின் ஆயுட்கால உறுப்பினராகவும் அரச சேவைப் பட்டதாரி அலுவலர் சங்கத்தின் யாழ். மாவட்ட கிளையின் நிர்வாக சபை உறுப்பினராகவும் இருந்து வருகின்றார். (6)

## விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாண மாநகர சபையில் வெற்றிடமாகவுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பதவிக்கு தகைமையானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

இதற்கு விண்ணப்பிக்கவிரும்புவோர் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் தமது சுயவிபரங்கள் மற்றும் தகைமைச் சான்றிதழ்களின் பிரதிகள் போன்ற ஆவணங்களை பதிவுத் தபால் மூலமாக 'மாநகர முதல்வர் யாழ்ப்பாணம்' எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (6)

## தென்மராட்சியில் தற்செயல் நிவாரண கொடுப்பனவு பெறுவோர்

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் தற்செயல் நிவாரண உதவி கோரிய நால்வருக்கு உதவிக் கொடுப்பனவு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டது.

இதற்கமைய பொ. நாகேந்திரன் (மந்துவில் மேற்கு), வே. அனந்தபவான் (கைதடி மேற்கு), இ. ஜெயக்குமார் (நாவற்குழி), நா. தேவகாந்தம் (சரசாலை தெற்கு) ஆகியோர் தமது தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றுடன் எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (6)

## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்

# கேள்வி அறிவித்தல் 2010

வலி தென்மேற்கு பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகத்தின் சந்தைக் கட்டடத் தொகுதியில் உள்ள கடையை வாடகை அடிப் படையில் வியாபாரம் செய்வதற்கு வழங்குவதற்கென கேள்வி செயலாளரால் கோரப்படுகின் றன.

| பொதுச்சந்தை கட்டடத் தொகுதி | மாத வாடகை | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த தொகை |
|---|---|---|
| பண்டத்தரிப்பு பட்டின புதிய வெளிப்புறக்கடை இல 01 | ரூபா 900.00+ ஏனைய வரிகள் | ரூபா 250000.00 |

01. கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி: 22.03.2010 – 26.03.2010 வரை
02. கேள்விப்பத்திரம் ஏற்கும் திகதி: 30.03.2010 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி
03. கேள்வி திறக்கும் திகதி: 30.03.2010 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணி
04. கேள்விப்பத்திர கட்டணம் ரூபா 500.00ம் (வற்வரி தவிர்த்து) மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப்பணம் ரூபா 2000.00யும் செலுத்தி கேள்வி விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.
05. கேள்வி விண்ணப்பம் குறிக்கப்பட்ட தினத்தன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியவாறு செயலாளர், வலி தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் என்னும் முகவரிக்கு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ***'கடைக்கான கேள்வி'*** எனக் குறிப்பிடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும் அல்லது சபையின் தலைமை அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் போடப்படல் வேண்டும்.
06. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் அவரது கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்ட பின் இக்கடைக்கென குறிப்பிடப்பட்ட உரிமைப்பணத்துடன் N.B.T 3% வற்வரி 12% ஐயும் சேர்த்து 02.04.2010 ஆம் திகதிக்கு முன்னர் உரிய உப அலுவலகத் தில் செலுத்தி வாடகை உடன்படிக்கையை செய்து கொண்டு கடையைப் பொறுப்பேற்றல் வேண்டும்.
07. குடும்ப அங்கத்தவர் ஒருவர் ஒரு கேள்விக்கு மேல் சமர்ப்பிக்க முடியாது.
08. கேள்வியை ஏற்றுக்கொள்ளவோ நிராகரிக்கவோ சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
09. இது சம்பந்தமாக மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்திலும், பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகத்திலும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
10. இக்கேள்வி தொடர்பான அலுவலகத் தொடர்புகளுக்கு தேசிய அடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும்.

செயலாளர்,
வலி தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

(சி/4752)


# தேர்தல் முடிவுகளை இலகுவாக அடையாளம் காணும் முறை

## தேர்தல்கள் ஆணையாளர் நடவடிக்கை

(கொழும்பு)

வாக்கு எண்ணும் மையங்களில் முடிவுகளை இலகுவாக அடையாளம் காணக்கூடிய முறையொன்றை அந்த மையங்களில் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திசா நாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணையாளருக்கும் கட்சிகளின் செயலாளர்களுக்கும் இடையில் நேற்று முன்தினம் தேர்தல் செயலகத்தில் நடைபெற்ற சந்திப்பில் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இந்த சந்திப்பில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் செயலாளர் அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த, ஜனநாயக சுதந் திரக் கூட்டணியின் செயலாளர் விஜித ஹேரத் ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் ஜோசப் மைக்கல் பெரேரா உள்ளிட்ட பல கட்சிகளை சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வாக்கு எண்ணும் மையங்களின் காபன் பிரதி தொடர்பில் இந்த் சந்திப்பில் கூடிய கவனம் செலுத்தப்பட்டது. அதனையடுத்து இம்முறை இந்த காபன் பிரதிகள் தொடர்பில் உரிய வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க நடவடிக்கை எடுப்பதாக தேர்தல் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார். (2-6)

# ஆளும் கட்சி அளித்த வாக்குறுதிகள் இது வரை நிறைவேற்றப்படவில்லை

## ஐ.தே.க.தெரிவிப்பு

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கட்சி அளித்த வாக்குறுதிகள் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை என ஐக்கிய தேசியக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

பொதுத்துறை ஊழியர்களது சம்பளங்களை 2ஆயிரத்து 500 ரூபாவாக அதிகரிக்கப்படும் என கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது அறிவிக்கப்பட்ட போதிலும் குறித்த வாக்குறுதி இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை என ஐக்கிய தேசியக்கட்சியின் கேகாலை மாவட்ட வேட்பாளர் கபீர் ஹசீம் தெரிவித்துள்ளார்.

• அத்துடன் பல்கலைக்கழக பட்டதாரிகள் 20 ஆயிரம் பேருக்கு அரசாங்க தொ[illegible]களை வழங்குவதாக அளித்த வாக்குறுதியும் நிறைவேற்றப்படாத வாக்குறுதி பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளதாகவும் இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சி நடத்திய 16 ஆண்டு காலத்தில் எவ்வித அபிவிருத்தியும் ஏற்படவில்லை என சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டை அழிவுப் பாதைக்கு இட்டுச் சென்ற அதே அமைச்சர்கள் மீண்டும் மக்கள் ஆணையைக் கோருவது வேடிக்கையானது என மேலும் தெரிவித்துள்ளார். (2-6)


# GBS Greenwich Business School

## UK Student Visa

## புதிய நடைமுறைகள்



- CAS இலக்கம் என்றால் என்ன?
- எத்தனை மணித்தியாலயம் வேலை?
- IELTS அவசியமானதா?

இன்னும் பல வினாக்களின் விடைகளுடனும் போதிய ஆலோசனை வழங்க GBS அதிபர் யாழ். வருகிறார். இன்று (21.03.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப.11 மணிமுதல்

உங்களுடன்.........

## Greenwich Business School

19, Chettiththeru Lane,
Nallur, Jaffna.

021 3734747, 0773537378

கொழும்பு: 190, Grandpass Road,
Colombo-14

0114366331 077 3537378

(சி-4757)




## சேவை முகவர் விற்பனைக்கு

வீடுகள், காணிகள் என்பன கந்தர் மடம், கச்சேரி நல்லூர் வீதி, பொற்பதி வீதி, கோண்டாவில், உரும்பிராய் பலாலி வீதியில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் (9பரப்பு காணி) ஆகிய இடங்களில் விற்பனைக்கு உண்டு. விற்க விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு: சுந்தரம் T.P 222 9177

(930)

## வீடு விற்பனைக்கு

சுதுமலை அம்மன் கோயிலிலிருந்து 500 மீற்றர் தூரத்திலும் மானிப்பாய் Bank of Ceylonஇல் இருந்து 600 மீற்றர் தூரத்திலும் 6 பரப்புக் காணியில் இரண்டு கிணற்றுடன் சகல வசதிகளுடன் ஐந்து அறைகளுடன் வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 021 222 5697
077 9920635

(929)

## டிலிவரிப் பையன்கள் தேவை

வானில் சென்று சாமான்கள் ஏற்றி இறக்குவதற்கு முன்பு அனுபவம் உள்ள டிலிவரிப் பையன்கள் உடன்தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். விளம்பரம் கண்டவுடன் வர்த்தகர் ஒருவரின் சிபார்சுக் கடிதத்துடன் நேரில் வரவும்.

கால நேரம்– 9.00 மணி தொடக்கம் 12.00 மணி வரை.
இம் மாதம் 25 ஆம் திகதி வரை
முகவரி: சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 2567

(சி-4699)

# மலேசியாவில் இலங்கை போலி முகவர் கொலை

(கொழும்பு)

மலேசியாவில் தொழில் வாய்ப்புகளை பெற்றுத் தருவதாக கூறி பணத்தை வசூலித்து அழைத்துச் செல்லப்பட்ட இலங்கையர் சிலருக்கும் அவர்களை அழைத்துச் சென்ற போலி வேலைவாய்ப்பு முகவருக்கும் இடையில் கோலாலம்பூரில் ஏற்பட்ட வாய்தர்க்கம் முற்றியதில் இடம்பெற்ற தாக்குதலில் முகவர் கொல்லப்பட்டுள்ளதாக அங்கு உள்ள இலங்கைத்தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக 6 இலங்கை பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் இரண்டு பேரை கைதுசெய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு பொலிஸார் அறிவித்துள்ளனர்.

மலேசியாவில் சிறந்த ஊதியத்தில் தொழில் வாய்ப்புகளை பெற்றுத் தருவதாக கூறிய ஒரு இலட்சம் முதல் 5 இலட்சம் ரூபா வரை பணத்தை அறவிட்டு குறித்த இலங்கையர்கள் அங்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். சிங்கப்பூரில் இருந்து சுற்றுலா விசா அனுமதியில் அழைத்துச் செல்லப்பட்ட இவர்களிடம் தொழில் விசா அனுமதி பெற வேண்டுமாயின் மேலதிக பணம் தரப்பட வேண்டும் என கொல்லப்பட்ட முகவர் கூறியுள்ளார்.

இதன் காரணமாக ஏற்பட்ட வாய்த் தர்க்கம் முற்றியதை அடுத்தே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சுற்றுலா விசா அனுமதியில் மலேசியாவுக்கு அழைத்து வரப்படும் இலங்கையரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும் சுற்றுலா விசா அனுமதியில் சென்று தொழிலில் ஈடுபடுவது சட்ட விரோதமானது எனவும் இலங்கை தூதரக அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளதுடன் இதனால் போலியான முகவர்களை நம்பி ஏமாற வேண்டாம் எனவும் மக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளார். (2-6)

# இரண்டு தினங்களில் இடம்பெற்ற பல்வேறு விபத்துக்களில் 7பேர் பலி

(கொழும்பு)

இரண்டு தினங்களில் பல்வேறு பகுதிகளில் பதிவாகிய வாகன விபத்துக்களில் 7 பேர் உயிரிழந்துள்ளனர். மின்னேரியா, கிரிதலை பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

மண் ஏற்றிச் சென்ற டிப்பர் ஒன்றும், முச்சக்கர வண்டியொன்றும் மோதி விபத்துக்குள்ளானதாக பொலிஸார் குறிப்பிட்டனர். இந்த விபத்து வியாழன் 11.30 மணியளவில் இடம்பெற்றதுடன் விபத்தில் காயமடைந்த மேலும் இருவர் பொலநறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே பலாங்கொடை அளுத்துவா சந்திக்கருகில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிழந்துள்ளனர்.

நேர் எதிரே பயணித்த லொறி ஒன்றும் முச்சக்கரவண்டியொன்றும் மோதி விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விபத்தில் முச்சக்கர வண்டி சாரதி உயிரிழந்ததுடன், காயமடைந்த மற்றுமொருவர் இரத்தினபுரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார். விபத்தில் காயமடைந்த மேலும் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கேகாலை-கண்டி வீதியில் மீ.பிட்டிய பகுதியில் இரண்டு முச்சக்கரவண்டிகள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் காயமடைந்த ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்தார்.

மின்னேரியா மடு ஓயா பகுதியில் மோட்டார் சைக்கிளொன்றும், முச்சக்கரவண்டியொன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் மற்றுமொருவர் உயிரிழந்தார்.

இதேவேளை ஹொக்கல பகுதியில் இடம்பெற்ற இன்னுமொரு வாகன விபத்தில் ஒருவர் பலியானார். (3-2)


பாடசாலைக் கல்வியை

அண்மையில் பூர்த்தி செய்த

மாணவர்களுக்கு

ஹற்றன் நஷனல் வங்கி

யாழ் குடாநாட்டில்

நடாத்தும் ஆரம்ப வங்கியியல் மற்றும்

வணிகத்துறைச் சான்றிதழுக்கான

கற்கை நெறி

| | | |
|---|---|---|
| அனுமதிக்கான தகமைகள் | - | • 22 வயதிற்குக் குறைந்தவராக இருத்தல் வேண்டும்<br>• க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் 5சிறப்புச் சித்திகளுடனும் கணிதபாடம், ஆங்கிலமொழி அல்லது வர்த்தகமும் கணக்கியலும் பாடங்களில் ஏதேனுமொரு பாடத்தில் விசேட சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்<br>• க.பொ.த. உயர்தரத்தில் ஒரே அமர்வில் ஒருபாடத்தில் சிறப்புச்சித்தியும், இரண்டு பாடங்களில் சாதாரண சித்தியும்பெற்றிருத்தல் வேண்டும் |
| பாடநெறியில் உள்ளடக்கப்படும் பாடங்கள் | - | • வியாபாரமும் வங்கியியலும்<br>• கணக்கியல்<br>• பொருளியல்<br>• முகாமைத்துவமும் கட்டமைப்புகளும் |
| பாடநெறி கற்பிக்கப்படும் மொழி | - | ஆங்கிலம் |
| காலம் | - | 60 மணித்தியாலங்கள் |
| இடம் | - | HNB சுன்னாக வாடிக்கையாளர் நிலையம் |

மேலதிக விபரங்களுக்கும் விண்ணப்பிப்பதற்கும் http://www.hnb.net என்னும் இணையத்தளத்தில் "Careers at HNB" பகுதியினை பார்க்கவும். அனைத்து விண்ணப்பங்களும் மேற்குறிப்பிட்ட இணையத்தளத்தினூடாக 26.03.2010 முன்னர் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

HNB

(C-4696)


# விசா மோசடி செய்த 59பேர் நாடு கடத்தல்

(கொழும்பு)

குடிவரவு குடியகல்வுச் சட்டங்களை மீறியமை தொடர்பாகக் கைது செய்யப்பட்ட 59 வெளிநாட்டவர்கள் இந்த வருடத்திற்குள் வெளியேற்றப்பட்டுள்ளதாக இலங்கை குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும் 19 வெளிநாட்டவர்கள் மிரிஹான தடுப்பு நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக திணைக்களத்தின் விசாரணைப் பிரிவின் உதவிக் கட்டுப்பாட்டாளர் விலியம் தேவேந்திரராஜா குறிப் பிட்டார்.

அவர்களில் அதிகமானவர்கள் சுற்றுலா வீசா மூலம் நாட்டிற்கு வருகை தந்து வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் எனவும் அநேகமானவர்கள் இந்தியா மற்றும் பாகிஸ்தான் நாட்டவர்கள் என தேவேந்திரராஜா மேலும் தெரிவித்தார். (6)

# சமுத்திரதேவி படகு மீளவும் சேவையில்

(வேலணை)

குறிகாட்டுவானுக்கும் நெடுந்தீவுக்குமான கடல் போக்குவரத்து சேவையில் சமுத்திரதேவி என்ற படகு நீண்டகாலத்தின் பின்பு தற்போது சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

இப்படகு நெடுந்தீவு மக்களுக்குரிய பொருட்களை ஏற்றி இறக்கும் பணியினை மேற்கொண்டு வந்தது. திடீரென இயந்திரம் பழுதடைந்தமையால் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தது.

தற்போது வீதிஅபிவிருத்தி அதிகாரசபையின் பொறியியல் பிரிவினரால் திருத்தம் செய்யப்பட்டு மீளவும் நெடுந்தீவு குறிகாட்டுவான் கடல் வரி போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (6-22)

# பிரதமர் பதவிக்கு பசில் ராஜபக்ஷவே மிகவும் பொருத்தமானவர்

## மேர்வின் சில்வா

(கொழும்பு)

இம்முறை பொதுத் தேர்தலின் பின்னர் பிரதமர் பதவி கம்பஹா மாவட்டத்திற்கு வழங்கப்பட வேண்டும் எனவும் அதற்கு மிகவும் பொருத்தமானவர் பசில் ராஜபக்ஷவே எனவும் தொழில் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

களனி பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போது இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சக்கர நாற்காலியில் இருந்த தனது தாயாரை சந்திரிகா பிரதமர் பதவியில் அமர்த்தியுள்ளார்.

தற்போது நாட்டின் அபிவிருத்திக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வரும் டி.ஏ.ராஜபக்ஷ பரம்பரையைச் சேர்ந்த ஒருவரே இம்முறை பிரதமராக நியமிக்கப்பட வேண்டும். அதற்கு மிகவும் பொருத்தமானவர் பசில் ராஜபக்ஷவே எனவும் மேலும் தெரிவித்துள்ளார். (2-6)

# வலயமட்டத்தில் முதலிடம்

"இலங்கையைப் பாதுகாப்போம் பூமியை பாதுகாப்போம்" என்ற விடயம் தொடர்பான முன்வைப்பு திறனாய்வு போட்டியில் வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலய தரம் 10 மாணவி செல்வி லதாயினி மனோகரலிங்கம் வலய மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

மேலும் இவர் தேசிய மட்டப் போட்டியிலும் கலந்துகொள்ள இருப்பதாக பாடசாலை கல்விச் சமூகத்தினர் தெரிவித்துள்ளனர். (6-32)

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### சொல்லுங்கள் கேட்போம்

வாக்குப் போட்டுப் போட்டு
தேய்ந்து போனது எம் கரங்கள்
வாக்குகளுக்காகவே – எம்
வீடுதேடி வந்தவர்கள்
தொடர்ந்தும் வருவார்களா
எங்கள் வீடுகளை நோக்கி
அல்லது
வாக்கு அளித்த பின்பு
மாயமாய் மறைவார்களோ
சொல்லுங்கள் கேட்போம்

புரட்சி
யாழ்ப்பாணம்

### தன்நம்பிக்கை

காற்றாடிகளை
சுவீகரித்தபடி நான்...
மூச்சுக்காற்றில்
சுழல வைப்பதற்காய் – என்
குழந்தைகளுக்கு...

சா:ரமேஸ்குமார்
மீசாலை கிழக்கு

### மீட்பாரற்ற கரையும் நண்டுகளின் நர்த்தனமும்

அலை தழுவிப் போன கரைகளெங்கும்
நிரையாய் நண்டுகள்
நடக்கத் தொடங்கியதால்...
கீறல்களால்... கரை நிரம்பிற்று
கீறல்களையளிக்க
அலைக்கரங்கள் முயலவில்லை
கரைகள் பற்றிய
கவலைகளெதுவுமின்றி
கடலேனோ தடுமாறிக்கொண்டிற்று
அலைகளின் ஸ்பரிசங்களை
ஏற்றுப் பழக்கப்பட்ட கரைக்கு
நண்டுகளின் கீறல்கள்...
வலியை ஏற்படுத்தியிருக்கக் கூடும்
வலிகளிலிருந்து மீள்வதற்கான
தவமொன்றைத் தொடங்கிய கரை
அலைகளைச் சபிக்கவும் தவறவில்லை
காற்றுமேனோ
விசும்பல்களுடனும் முனகல்களுடனும்
அடங்கிற்று
மீட்பாரற்றகரை
மீள மீள வலி சுமக்கையில்...
நடந்த நண்டுகள்
நர்த்தனமாடவும் தொடங்கினால்...?

கவிஞர் சு.க.சிந்துதாசன்

### என் சுவாசமானவனே

ஆகாயத்தைத் தொட நினைக்கும்
ஆசைகள் அந்தரத்தில்
உப்பு நீரில் நீராடி
வெறுத்துப்போன கன்னங்கள்
மனக் கூடையில் நிறைந்துவிட்ட
துயரக் குப்பைகள்
ஏக்கங்களைத் தீபமாய்
ஏற்ற நினைக்கும் இதயம்
ஏனிந்த வாழ்க்கையென்று
எண்ணிக்கொள்ளும் சிலநேரம்
உலகின் இன்பங்கள் அத்தனையும்
அள்ளிவந்து
அழகாய்ச் சிரிப்பான் அன்புமகன்

திருமதி இ.நவதர்சினி
வயாவிளான்

### தேர்தல்

வாக்குகள் வெல்ல
வாக்குறுதிகள் தோற்கும்
அரசியல் ஆட்டத்தின்
சுதாட்ட காலம்

பூலக்சி
கல்லுவம்

### இமயம் தொட...

எதிர்காலத்துக்காய்...
உன் பயணத்தில்
முள் வரும்
பூவரும்
சகஜமாக்கு
வலிகளும் சுகங்களும்
கலந்ததுதான் வாழ்க்கை
முட்களில் பட்டதளிம்பு
பூக்களில் பட ஆறிப்போகும்.

மாவை. நா.கஜேந்திரா

### தெரியவில்லை வேறு வழி

நீ இன்னொருத்திக்கு
சொந்தமாகப் போகிறாய் என்று
தெரிந்தும்...
என் மனம் உன்னையே – என்
கணவனாக தரவேண்டும் என்று
வரம்கேட்கிறது.
கடவுளிடத்தில்!
என் வேண்டுதல்
உனக்கும் உற்றவருக்கும்
மற்றவருக்கும் மட்டுமல்ல – அந்த
கடவுளுக்குக் கூட...
வேடிக்கையாய்த் தெரியலாம்!
இருந்தாலும் என்ன செய்ய?
இதைவிட வேறு வழி...
தெரியவில்லை எனக்கு

செல்வி க.அருவி
புத்தூர் வடக்கு

# மௌனத்தின் தேடல் – 11



### அன்னையே பெரும் சொத்து

ஈன்றெடுத்து உதிரத்தைப் பாலாக்கி
தியாகங்கள் பலபுரிந்து
என்னை உருவாக்கிய
உயிர்வாழும் தெய்வமே
பொன்னென்ன பொருளென்ன
நான் ஈட்டிய செல்வமென்ன
இவையெல்லாம் சிறுதூசு
நீயே என் பெரும் சொத்து

இ.அ.அமலரட்ணம்
யாழ்ப்பாணம்

### உயிர்

உயிர் கொடுத்த உத்தமியே
உந்தன் உயிரைக் காத்திடவே
உன்னைச் சுமக்கின்றான்
உந்தன் மைந்தன்

என்.எஸ்.கலா
நவாலி

### உரிமைப் பயணம்

கருவில் சுமந்தவளை
கைகளில் சுமந்து
பயணிக்கிறேன்
தேர்தல் களம் நோக்கி
நின்றுவிடாது நம்மவர்கள்
பயணங்கள்
உரிமைகள் கிடைக்கும் வரை!!!
இறுதி மூச்சு இருக்கும் வரை

க.ராஜீவன்
யாழ்.பல்கலைக்கழகம்

### வசந்தமாய் வாழ்ந்திடுக

வயதாகி வாழ்வில்
வலுவிழந்து நின்றவரை
வாரியணைத்தெடுத்து
வாழ்க்கைக்கு வலுவூட்டும்
வண்மை கொண்ட நீ
வாழ்ந்திடுக என்றென்றும்

அ.பிரான்சிஸ்
பருத்தித்துறை

### அன்னையே

பத்துத் திங்கள் கருவறையில்
பத்திரமாய் பொத்தி வளர்த்த
பத்தினியும் அன்னைதான்
பாரினிலே நாம் பவனி வர
தேராய் இருந்து தினம்
தேய்ந்தவளும் அன்னைதான்
தோழிலே எனைச்சுமந்து
தூங்கவைத்த
தாலாட்டுப்பாட்டுக்கு
தேவாரம் என்ன
திருவாசகம் கூட நிகராகுமோ
திருவள்ளுவர் அருளிய
திருக்குறளும் அன்னைதான்

ரி.ஜீவா
நலன்புரி நிலையம், கைதடி

### வசந்தமாய் வாழ்வாய் நீ

முதியோர் இல்லத்தில்
முக்குழிக்க விடும் உலகில்
வாரியணைத் தெடுத்து
வாழ்க்கைக்கு வலுவூட்டும்- நீ
வயதாகும் காலத்தில்
வசந்தமாய் வாழ்ந்திடுவாய்

முல்லை.சுபாஸ்

### சொல் மானிடனே!

ஈரைந்து மாதங்கள் – உன்னை
கருவில் சுமந்தவளை – நீ
சுகம் என்று கருதி
சுமந்து வருகின்றாயோ?
அல்லது
சுமை என்று கருதி
சுமந்து செல்கிறாயோ?

கஜேந்தினி அருளானந்தம்
கொம்பாத்தோட்டம்

### சுமையே சுகம்

முதியோர் இல்லங்கள்
மலிந்து கிடக்கும்
இவ்வுலகில் – உன்
செயல் வியக்க வைக்கிறது
என் குறுகிய இதயத்தை

செ.நிரஞ்சனா
பிளவத்தை

### பொறுத்திரு

சுமைகளே ஆன உலகில்
அன்னையைச் சுமந்து செல்ல
சுமையே தெரியவில்லை
எம் இனத்தின் எதிர்காலம்
சுமைகளான போதும்
என்றோ சுவாசத்தின் சூடுபட்டு
சுதந்திரம் பிறக்கும்
அதுவரை பொறுத்திரு
அன்னையே

இந்திர புத்திரன்
மாவை கலட்டி

சங்குநாதம்

### சுமைதாங்கி

பத்து மாதம் கருவிற் சுமந்து – நம்
பசியாற பட்டினியை தான் சுமந்து உடற்
பிணி போக்க இரவோடு தூக்கம் சுமந்து – தினம்
தினம் நம் நினைவாலே ஏக்கம் சுமந்து
தசையாடும் உடல் சுமந்து
தடுமாறும் நடை சுமந்து தள்ளாடும் வேளை
தான்சுமந்த விழுதென்று
சுமைதாங்கியை சுமக்கின்றதோ

சந்நிதி கஜா

### புரிந்துகொண்டாய் இன்று

புதுமைகள் பல்புரிந்து பூரித்தாய் – மனிதா
புதுமைகளே வாழ்க்கை என்று!
புரியவில்லை அன்று உனக்கு
இதுமைகள்தான் வாழ்வியல் பொக்கிசம் என்று
புரிந்துகொண்டாய் இன்று!
புறப்படு வாழ்க்கைப் பாதையிலே – இனி
வெற்றி உனக்கு

த.சக்திவேல்
கல்லூரி வீதி பருத்தித்துறை

# மௌனத்தின் தேடல்- 10



அன்பு வாசகர்களே!

உங்கள் எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை

ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 26.03.2010 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளிற்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# மேதையில் வடிவேலு



நீண்ட இடைவெளிக்குப் பின்னர் ராமராஜன் நடித்து வரும் 'மேதை' படத்தின் 75 சதவிகித படப்பிடிப்பு முடிந்துவிட்டது. மே மாதம் ரிலீஸ். பாடசாலை ஆசிரியராக ராமராஜன் நடிக்கிறார். அஜய் மற்றும் ஹாசினி என்ற புதுமுகங்கள் ஜோடியாக நடிக்கிறார்கள்.

இதில் வடிவேலு நடிக்க ஒப்புக்கொண்டிருக்கிறார். ராமராஜனுடன் கவுண்டமணி, செந்தில் கூட்டணி காமெடி வெற்றி பெற்றதைப் போல ராமராஜன், வடிவேலு கூட்டணியும் வெற்றி பெறும். 1500 பாடசாலைக் குழந்தைகளுடன் ராமராஜன் பாடும் பாடல் படத்தின் ஹைலைட்டாக இருக்கும் என்கிறார் இயக்குநர் என்.டி.ஜி. சரவணன்.







சிங்கப்பூரில் ஹோட்டல் நடத்துகிறார் நிழல்கள் ரவியின் மகன் பரத். டென்னிஸ் விளையாட வரும் சனாகானின் அழகில் மயங்குகிறார். பரத்தின் காதலை சனா ஏற்கிறார். இதற்கிடையில் நிழல்கள் ரவி தனது வளர்ப்பு அப்பாதான், நிஜ அப்பா இந்தியாவில் இருக்கிறார் என்ற உண்மை பரத்துக்கு தெரிகிறது. அவரைப் பார்ப்பதற்காக இந்தியா வருகிறார்.

தாதா ராஜ்யம் நடத்தும் பிரபுவுடன் பரத்துக்கு மோதல் ஏற்படுகிறது. தனது மனைவியின் சாவுக்குக் காரணமாக இருந்த நிழல்கள் ரவியின் மகன்தான் பரத் என்று கருதும் பிரபு, அவரை கடத்தி ரவியை பழிவாங்கத் திட்டமிடுகிறார்.

இதற்கிடையில் சனாவை விளையாட்டு வீராங்கனையாக்கி பணத்தை சுருட்ட திட்டமிடுகிறார் வில்லன் ரஞ்சித். அதற்காக பரத்தை தீர்த்துக்கட்ட முயல்கிறார். அப்பாவை பரத் கண்டுபிடித்தாரா, சனாவை கைப்பிடித்தாரா என்பது மீதிக்கதை.

ரவுடியிசம், பழிக்குப் பழி, லவ், டூயட் என பழைய போர்முலாவில் கதை சுழல்கிறது. ஹோட்டல் முதலாளி பரத். அவருக்கு துணையாக விவேக் என இருவரும் சிங்கப்பூர் வீதிகளில் லகலக செய்கின்றனர். சனாகானை பார்த்தவுடன் காதல் பற்றிக்கொள்ளும் பரத், பின் தொடர்தல், காதல்வலை வீசுதல் என ரொமான்சை தொடங்கிவிடுகிறார். கையில் கிடைத்த பாஸ்போர்ட்டை வைத்துக்கொண்டு சனா மீது லவ் அட்டாக் தொடுக்கும் பரத்துக்கு அவசரமாக காதல் லிங்க் கிடைக்கிறது. காதலியைத் தேடி பரத் இந்தியா போகப்போகிறார் என்று எண்ணிக்கொண்டிருக்கும்போது, ரவியின் வளர்ப்பு மகன்தான் பரத் எனத் தெரியவருவது பல படங்களில் பார்த்த திருப்பம். தனது ஆட்களை அடித்து நொறுக்கும் பரத்தை தரதரவென இழுத்து பஞ்ச் விடும்போது பதற வைக்கிறார் பிரபு. பரத்தை தீர்த்துக்கட்ட அடியாட்களுக்கு கட்டளை போடும்போது வில்லனாகவே மாறிவிடுகிறார். புதிய ரூட் பிடித்துவிட்டார்கள் என நிமிர்ந்து உட்காருகிறார்கள் ரசிகர்கள். ஆனால், மறுபடியும் எங்கெங்கோ சுற்றி கடைசியில் பிரபுவின் மகன்தான் பரத் என்று மங்களம் பாடுகிறார்கள்.

வெற்றிலைக்கு சுண்ணாம்பாக வில்லன் வேஷம் போடுகிறார் ரஞ்சித். சொன்னதை செய்திருக்கிறார் சனாகான். ஹிப்பி ஸ்டைலில் முடியை வளர்த்துக்கொண்டு சிரிக்கவைக்க முட்டிமோதுகிறார் விவேக். எம்.எஸ்.பாஸ்கர், தமாஷ் தாதாவாகி போகும் இடமெல்லாம் மொத்து வாங்கி சிரிக்கவைக்கிறார். இசையில் தரண் சோபிக்கவில்லை. சகாதேவன் ஒளிப்பதிவு பளிச். கமர்ஷியல் படத்துக்கான விடயங்களை, சுவாரஸ்யம் இல்லாமல் தந்திருக்கிறார் இயக்குநர் பத்ரி.

மொத்தத்தில் "தம்பிக்கு இந்த ஊரு" -பழைய பார்முலா

# தமிழில் அதிக சம்பளம் வாங்கும் அசின்



'பொடிகார்ட்' படத்தின் தமிழ் ரீமேக்கில் விஜய்க்கு ஜோடியாக அசின் நடிப்பது தெரிந்த செய்தி. இந்தப் படத்தில் அசினுக்கு வழங்கப்படும் சம்பளம்தான் இப்போது அதிகமானது.

இந்தியில் சந்தர்ப்பம் இல்லாதபோதும் அசின் இரண்டு கோடி ரூபாய் சம்பளம் வேண்டும் என்று பிடிவாதமாக இருந்தாராம்.

வேறு நடிகைகளைத் தேட தயாரிப்பாளர் முடிவு செய்தபோது, விஜய் தலையிட்டு, அசின் கேட்கும் சம்பளத்தை கொடுத்து விடுங்கள் என்று கூறிவிட்டதாகத் தெரிகிறது.

சிவகாசி, போக்கிரி என ஹிட் படங்களின் ஜோடி அசின் என்பதால், அந்த ராசி தொடரட்டும் என்று அதே -சம்பளத்தை தர தயாரிப்பாளரும் ஒப்புக்கொண்டதாகத் தெரிகிறது.

மேலும் 3 இடியட்ஸின் தமிழ் ரீமேக்கிலும் அசின் நடிப்பார் என்று கூறப்படுகிறது.

சமீபத்தில் சென்னை வந்திருந்த அசின் "பொடிகார்ட்" ரீமேக் தொடர்பாக அதன் இயக்குநர் மற்றும் ஹீரோவை சந்தித்துப் பேசிவிட்டுச் சென்றதாகக் கூறப்படுகிறது.



# மர்மதேசம்



அருந்ததீ, ருத்ரம், 2012 உள்ளிட்ட பிரமாண்டமான படங்களை வெளியிட்ட இயக்குநர் இராம. நாராயணன் விரைவில் ஸ்ரீ தேனாண்டாள் பிலிம்ஸ் சார்பாக வெளியிடவுள்ள படம் "மர்மதேசம்".

கிரேக்க புராணங்களை அடிப்படையாகக் கொண்டு சுமார் 800 மில்லியன் டொலர் செலவில் தயாரிக்கப்பட்டுள்ள இந்தப் படத்தை லூயிஸ் லெட்டிரியர் இயக்கியுள்ளார். இவர் 'ஹல்க்' உட்பட பல வெற்றிப் படங்களை இயக்கியவர்.


உலகை அழிக்க வந்த அரக்கனை மனித உருவில் இருக்கும் கடவுள் அழித்தாரா என்பதுதான் கதை. இதில் நாயகனாக "அவதார்" படத்தில் நடித்த சாம் வொர்த்திங்டன் நடிக்கிறார்.

ஹொலிவுட்டுக்குரிய பிரம்மாண்டத்தோடும் 3டி மற்றும் 2டி தொழில்நுட்பத்துடனும் இந்தப் படத்தை எல்லாத்தரப்பு ரசிகர்களையும் கவரும் விதத்தில் உருவாக்கியிருக்கிறார்கள்.





# ஏப்ரல் 14 சுறா?



விஜய்யின் சுறா படத்தை திட்டமிட்டதற்கு முன்பாகவே வெளியிட தீர்மானித் திருக்கிறது சன் பிக்சர்ஸ். அநேகமாக படம் ஏப்ரலில் திரைக்கு வரலாம் என்கிறார்கள் தயாரிப்பாளர்கள்.

வேட்டைக்காரன் படத்துக்குப்பின்னர் விஜய் ரசிகர்களை மகிழ் விக்க வருகிறது சுறா. விஜய்யின் 50 ஆவது படம் என்பதால் எக்ஸ்ட்ரா கவனம் எடுத்து படத்தை செதுக்கியிருக்கிறார்கள். படத்தை இயக்கியிருப்பவர் ராஜகுமார், அழகர் மலை படத்தை இயக்கியவர்.

வடிவேலு, தமன்னா என்று வெயிட்டான நட்சத்திரங்களுடன் தயாராகியிருக்கும் சுறாவின் சில பகுதிகளை மலையாளத்தில் வெளியான சோட்டா மும்பை படத்தைத் தழுவி எடுத்திருக்கிறார்கள். ஆனால் படத்தின் பிரதான கதை வேறு. மீனவர்கள் , கடல் என்று விஜய் இதுவரை பழகாத இடம்.

தீபாவளிக்கு வெளியாகும் என்று எதிர்க்கப்பட்ட படம் அடுத்த மாதமே திரைக்கு வரவிருக்கிறது என்கிறார்கள் உற்சாகமாக. படத்தை வாங்கியிருக்கும் சன் பிக்சர்ஸ் காட்டும்ஆர்வமும், அவசரமும் தான் இதற்குக்காரணம் என்கிறார்கள். ஏப்ரல் 14 ஆம் திகதி படத்தை திரையில் பார்க்கலாம் என்கிறது விஜய் தரப்பு. ரசிகர்களுக்கு தீபாவளி ஏப்ரலிலேயே வருவது நல்லதுதானே.

# இம்முறை இனப்பாகுபாடின்றி பல்கலை அனுமதி வழங்கப்படும்

## பேராசிரியர் காமினி சமரநாயக்க

(கொழும்பு)

இம்முறை இனப் பாகுபாடின்றி மாணவர்களைப் பல்கலைக்கழகங்களில் அனுமதிக்கப் போவதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

திறமைகளின் அடிப்படையில் மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்படுவரென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க தெரிவித்தார்.

இதற்கமைய சுமார் 21 ஆயிரம் மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறவுள்ளனர். இதற்கான விண்ணப்பங்களை ஏற்கும் பணிகள் பூர்த்தி அடைந்துள்ளன எனவும் தெரிவித்தார்.

பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்படும் மாணவர்கள் வடக்குக் கிழக்குப் பல்கலைக்கழகங்களிலும் சேர்த்துக் கொள்ளப்படுவார்களெனவும் கடந்த காலங்களில் நிலவிய போக்குவரத்துப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ள நிலையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த வருடம் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு அனுமதி பெற்ற 22 மாணவர்களில் தலா நால்வர் வீதம் கொழும்புப் பல்கலைக்கழகம் தவிர்ந்த ஏனைய பல்கலைக்கழகங்களில் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.

இவர்கள் வேறு பல்கலைக்கழகங்களில் இணைக்கப்பட்டிருந்தாலும் அவர்கள் யாழ் பல்கலைக்கழக மாணவர்களாகவே கருதப்படுவார்களென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் தெரிவித்தார். (2-6)

# கிணற்றில் தவறிவீழ்ந்து குழந்தை உயிரிழப்பு

(கொழும்பு)

பொகவந்தலாவ பகுதியில் கிணற்றில் தவறுதலாக வீழ்ந்து 3 வயது குழந்தையொன்று உயிரிழந்துள்ளது. விளையாடிக் கொண்டிருக்கும் போதே இக்குழந்தை தவறுதலாக கிணற்றில் வீழ்ந் துள்ளது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக பொகவந்தலாவ வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (9-2)

# மாகாணசபை, உள்ளூராட்சி சபைகளில் பெண்களுக்கு 25 சதவீத ஆசன ஒதுக்கீடு

## ஐ.தே. முன்னணி

(கொழும்பு)

மாகாண சபைகளிலும் உள்ளூராட்சி சபைகளிலும் 25 சதவீத ஆசனங்களை பெண்களுக்கு ஒதுக்கிக் கொடுப்பதாக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் பெண்களுக்காக குரல் கொடுக்க பாராளுமன்றம் மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகள் என்பவற்றுக்குத் தெரிவாகும் பெண்களை இணைத்து மகளிர் சம்மேளனத்தை உருவாக்குவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடுவலையில் இடம்பெற்ற மக்கள் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து மேலும் தெரிவிக்கும் போது,

ஒவ்வொரு கிராமத்திலும் பல்வேறு வகையான தொழில்களைப் புரிவதற்காக 500 கோடி ரூபா முதலீட்டுடன் மகளிர் வங்கியொன்றை ஆரம்பிக்கவுள்ளதாகவும் அத்துடன் சிறு வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடும் பொருட்டு கிராமந்தோறும் மூவருக்கேனும் நிதி உதவி வழங்க உள்ளதாகவும் குறிப்பிட்டார். (2-6)

# தேர்தல் போட்டியில் கடவுளின் பெயரை பயன்படுத்துவோர் குறித்து கவனம் தேவை

## பேராயர் மெல்கம் ரஞ்சித்



(கொழும்பு)

கடவுளின் பெயரைப் பயன்படுத்தி தேர்தலில் போட்டியிடும் நபர்கள் தொடர்பில் மக்கள் கூடுதல் அவதானம் செலுத்த வேண்டுமென கொழும்பு கத்தோலிக்க பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

எதிர்வரும் பொதுத் தேர்தலில் கிறிஸ்தவ மதகுருவொருவர் கொழும்பு மாவட்டத்தின் தேசிய அபிவிருத்தி முன்னணி கட்சியின் சார்பில் போட்டியிடுகின்றார்.

"அவர் கத்தோலிக்க திருச்சபையைச் சேர்ந்தவர் அல்ல. எனக்கு அளிக்கப்படும் வாக்குகள் இயேசு கிறிஸ்துவுக்கு அளிக்கப்படும் வாக்குகள் என்ற சுலோகத்துடன் கூடிய சுவரொட்டிகளை அவர் பயன்படுத்தி உள்ளார்.

இவ்வாறான சுவரொட்டிகளை பயன்படுத்துவதற்குத் கத்தோலிக்க திருச்சபை ஒரு போதும் அனுமதியளிக்கவில்லை என்றார்.

மேலும் பேராயர்கள், மதகுருமார் மற்றும் மத அதிகாரிகள் செயற்பாட்டு அரசியலில் ஈடுபட முடியாது எனவும் அதற்கான அனுமதி வழங்கப்படமாட்டாது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (2-6)

# கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வரணி வடக்கு சூரிய கறுக்காய் அருள்மிகு சித்தி விநாயகர் ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன ஏககுண்டபக்ஷ மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.34 மணிமுதல் 10.58 மணிவரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

மேலும் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு எதிர்வரும் 24ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிமுதல் மாலை 3 மணிவரை எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 12 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று மண்டலாபிஷேக பூர்த்தி தினமான அடுத்த மாதம் 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது. (6)

# கோழி இறைச்சியின் விலையை ரூ.350க்கு நிர்ணயிக்க அரசு தீர்மானம்

ஒரு கிலோ கோழி இறைச்சியின் விலையை 350 ரூபாவாக நிர்ணயிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக கால்நடை அபிவிருத்தியமைச்சின் செயலாளர் சுனிமல் சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கோழி இறைச்சி ஒரு கிலோவின் உற்பத்திச் செலவு 340 ரூபாவாக இருந்த போதும் உற்பத்தியாளர்களும் நுகர்வோரும் பாதிக்கப் படாத வகையில் அரசாங்கம் தலையிட்டு கிலோவொன்றின் விற்பனை விலையை 350 ரூபாவாக நிர்ணயித்துள்ளது.

புறொயிலர் கோழி ஒன்று இறைச்சிக்கு தயாராகும் வரை அதற்கான விற்றமின் மருந்து மற்றும் ஊசிக்கான செலவுகள் அதிகமாகையால் உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படாத வகையில் விலை நிர்ணயத்தை கையாள வேண்டியுள்ளது.

அத்துடன் புத்தாண்டு காலத்தை முன்னிட்டு நுகர்வோரின் தேவைக்கேற்ற வகையில் கோழி இறைச்சி மற்றும் முட்டையின் உற்பத்தியளவை அதிகரிக்க நடவடிக்கை எடுத்துவரும் அதேவேளை நுகர்வோரின் தேவை ஈடுசெய்யப்பட முடியாமல் போகும் சந்தர்ப்பத்தில் அவற்றை இறக்குமதி செய்ய தயாராகவிருப்பதாகவும் கூறினார்.

வடக்கு கிழக்கில் மோதல் முடிவுக்கு வந்ததையடுத்து நாடளாவிய ரீதியில் கோழி இறைச்சி மற்றும் முட்டையின் நுகர்வுப் பெறுமானம் அதிகரிக்கப்பட்டிருப்பதனை அவதானிக்க முடிகின்றது.

அதன்படி கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் ஒரு மாதத்திற்கு தேவைப்பட்ட 9500 மெற்றிக்தொன் நிறைகொண்ட கோழி இறைச்சி தற்போது 11 ஆயிரம் மெற்றிக் தொன்னாக அதிகரிக்கப்பட்டுள்ளது என மேலும் தெரி வித்துள்ளார். (2-6)




உங்களை உணருங்கள் 'ஜெய் குருதேவ்' அன்பில் மலருங்கள்

ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் அவர்களின்

THE ART OF LIVING

வாழும் கலை பயிற்சி

உலகில் 182 நாடுகளுக்கு மேல் வெற்றிகரமாக பயிற்றப்படும் வாழும் கலைப் பயிற்சி மீண்டும் நமது இடத்தில் ஆரம்பமாகிறது.

◎ சுதர்சனக்கிரியா, மூச்சுப்பயிற்சி, தியானம், எளிய யோகா ஆகியவை உள்ளடக்கிய அற்புதமான பயிற்சி

◎ ஞாபகசக்தி அதிகரிக்க
◎ நிகழ்காலத்தில் வாழ
◎ மனதை ஒரு நிலைப்படுத்த
◎ வேலைகளில் முழுக்கவனம் செலுத்த
◎ ஆஸ்மா, இரத்தக் கொதிப்பு, நீரிழிவு நோய்களில் இருந்து விடுபட

இதில் கலந்து கொண்டு பயன்பெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அறிமுக உரை

இடம்: கம்பன் கோட்டம்
காலம்: 22.03.2010 (திங்கட்கிழமை)
நேரம்: மாலை 5.00 மணிக்கு
பயிற்சி நாட்கள்: 23.03.2010 (செவ்வாய்க்கிழமை) முதல் 27.03.2010 (சனிக்கிழமை) வரை

(ச-4701)

மேலதிக விபரங்களுக்கு :
வாழும் கலை அற நிறுவனம்-யாழ். மையம்
T.P.: 021 222 7030, 077 1777998


# சட்டவிரோத இறால் ஏற்றுமதி செய்ய முயன்ற இரு நிறுவனங்களுக்கு அபராதம்

சட்ட விரோதமாக வெளிநாட்டுக்குக் கொண்டு செல்லப்படவிருந்த ஒரு தொகை சிறிய இறால்களையும் சினை இறால்களையும் சுங்கத் திணைக்கள அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

இரண்டு நிறுவனங்களால் இறால்களை ஏற்றுமதி செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாக சுங்கத் திணைக்களத்தின் பிரதம அதிகாரி சமந்த குணசேகர தெரிவித்தார்.

இறால்களைச் சட்டவிரோதமாக அனுப்ப முயற்சித்த இந்த இரண்டு நிறுவனங்களுக்கும் தலா இரண்டு இலட்சம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னரும் இந்த இரண்டு நிறுவனங்களும் இது போன்று இறால்களை வெளிநாட்டுக்கு அனுப்ப முயற்சித்ததாகக் குற்றஞ்சாட்டப்படிருந்ததென சுங்கத் திணைக்கள அதிகாரி தெரிவித்தார். (ஓ-6)



இடம்பெயர்ந்து வந்து சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான உதவித் தொகையை லண்டனில் வசிக்கும் பழைய மாணவர் ரவீந்திரன் மாணவர்களின் பெற்றோர் ஒருவரிடம் வழங்குவதையும், அருகில் அதிபர் க. அருந்தவபாலன் நிற்பதையும் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் க. விஜயவாசன் நன்றியுரை ஆற்றுவதையும் படங்களில் காணலாம்.

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக கிளைகள் யாழிலும், வவுனியாவிலும் திறக்கப்படவுள்ளன

(கொழும்பு)

அரச சேவையை கிராமங்களுக்குள் உள்வாங்கும் நோக்கில் மஹிந்த சிந்தனை திட்டத்தின் அடிப்படையில் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தனது கிளைகளை யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும் திறந்து வைக்கவுள்ளதாக பணியகத்தின் ஊடக அதிகாரி கல்யாணப்பிரிய ராமநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது,

மஹிந்த சிந்தனையின் வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வெளிநாடுகளுக்குச் செல்லும் வட மாகாண இளைஞர், யுவதிகளின் வசதி கருதி யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் கிளைகள் திறந்து வைக்கப்படவுள்ளன.

இம் மாகாணங்களிலுள்ள வெளிநாடுகளுக்கு தொழில் வாய்ப்புக்கென செல்லும் இளைஞர், யுவதிகள் கொழும்புக்கு வந்து பல சிரமங்களை எதிர்கொண்டே தமது பயணத் தேவைப்பாடுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இதற்கான அசௌகரிய நிலையினை நிவர்த்திக்கும் நோக்கில் எமது வட மாகாண தமிழ் சகோதரர்களுக்கு இலகுவான முறையில் தமது பயணத் தேவைப்பாடுகளை செய்து கொடுப்பதற்கென இவ்விரு கிளைகளும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அங்கீகாரத்துடன் திறந்து வைக்கப்படவுள்ளன.

இத் திட்டத்தின்படி நாளை மறுதினம் (திங்கள்) காலை 11.30 மணிக்கு இல. 61/1, குறுக்குத்தெரு, நல்லூர், யாழ்ப்பாணத்தில் முதலாவது கிளை திறந்து வைக்கப்படவுள்ளது.

இதன் இரண்டாவது கட்டமாக செவ்வாய் காலை 11.30 மணிக்கு கமநல சேவை திணைக்கள கட்டிடம், புகையிரத வீதி, வவுனியா எனும் முகவரியில் இரண்டாவது கிளை திறந்து வைக்கப்படவுள்ளது.

இவ்விரு அங்குரார்ப்பண வைபவங்களில் வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் தலைவர் சட்டத்தரணி கிங்ஸ்லி ரணவக்க, யாழ். அரச அதிபர் கே. கணேஷ் உட்பட மேலும் பல உயரதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ் இரு கிளைகள் வாயிலாகவும் அங்கிருந்து தொழில் நிமித்தம் வெளிநாடு செல்வோரது தொழிற்பயிற்சி நெறி, சேவைக் கால ஒப்பந்தப் பதிவு, சேம நலன்கள், வங்கிக் கடனுதவி யாவும் மேற்கொள்ளப்படும் என்பது குறிப்பிடத்தக்கதாகும் என்றார். (2-6)

# கிழக்கில் கடத்தல், காணாமல் போதல் சம்பவங்கள் அதிகரித்துள்ளன

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் ஆட்கள் காணாமல் போதல், கடத்திச் செல்லப்படுதல் போன்ற சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து பொலிஸாருக்கு அதிகளவிலான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

தேர்தலில் அரசியல் குழுக்கள் இடையில் காணப்படும் அதிகாரப் போட்டி காரணமாக எதிர்த் தரப்பினர் கடத்திச் செல்லப்பட்டு காணாமல் போவதாகவும் இதன் மூலம் மக்களை பயமுறுத்தும் செயலில் ஈடுபட்டுள்ளதாகவும் பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. (6-2)

## ஏனைய மாவட்டங்களிலுள்ள

# முல்லைத்தீவு மாவட்ட மக்களை பதிவு செய்யுமாறு அறிவிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்து ஏனைய மாவட்டங்களில் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் தங்கியிருக்கும் கரைதுறைப்பற்று, ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த மீள் குடியேற்றத்திற்காக பதிவு செய்து இதுவரை அனுமதிச் சிட்டையினைப் பெற்றுக் கொள்ளாதவர்களுக்கான அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் 170, புகையிரத நிலைய வீதி, வைரவப்புளியங்குளம், வவுனியாவில் இயங்கும் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பு அலுவலகத்தில் கிராம அலுவலர் பிரிவு ரீதியாகப் பதிவு செய்து அனுமதிச் சிட்டையினைப் பெற்றுக் கொள்ளுமாறு முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அறிவித்துள்ளார். (2-6)



சிறுப்பிட்டி வடக்கு-இலுப்பையடி
ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்
வசந்தோற்சவம் 21.03.2010
இன்று மாலை 6 மணிக்கு ஆரம்பமாகும்
வனத்திற்கு அம்பாள் எழுந்தருளல்-விசேட பூசை
சொற்பொழிவு நிறைவும் கௌரவிப்பும்
கல்வியங்காடு தவில் இளம் வித்துவான் வசந்தமோகன் கோபிசங்கருக்கு 'தவில் சுடர் அழகன்' எனும் விருது வழங்கி கௌரவித்தல்
மாவை சிவநாதம் பட்டிமன்றக்குழு வழங்கும் பட்டிமன்றம்
விசேட மேளக் கச்சேரி
பரத நாட்டியம்
இனுவில் இளந்தொண்டர் சபை வழங்கும் பக்தநந்தனார் நாடகம்
அம்பாள் திருவீதியுலா

தேவஸ்தானம்


## தேர்தல் காலத்தில்

# பொதுச் சொத்து பாவனை தொடர்பில் ட்ரான்ஸ் பெரன்சி அறிவுறுத்தல்

(கொழும்பு)

பொதுத் தேர்தல் காலத்தில் அரசாங்க சொத்துப் பாவனை தொடர்பில் அமைச்சின் செயலாளர்களுக்கு ட்ரான்பெரன்ஸி இன்டர்நெசனல் அமைப்பு கடிதம் அனுப்பி வைத்துள்ளது.

இதில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக பொதுச் சொத்துக்கள் பயன்படுத்தப்படக் கூடாதென தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலின் போதும் பொதுச் சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளதாகவும் இவ்வாறாக சட்ட திட்டங்களுக்கு புறம்பான வகையில் நிதி கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படக் கூடாது என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

# சிசிலி கொத்தலாவல எந்த நாட்டில் இருக்கிறார்

## கண்டுபிடிக்க தொடர்ந்து நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கையின் பிரபல தொழிலதிபரான லலித் கொத்தலாவலவின் மனைவி சிசிலி கொத்தலாவல எந்த நாட்டில் உள்ளார் என்பது தொடர்பில் தொடர்ந்தும் ஆராய்ந்து வருவதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்தது.

கோல்டன் கீ நிதி நிறுவன மோசடி தொடர்பில் லலித் கொத்தலாவலவுக்கும் அவரது மனைவிக்கும் கல்கிஸை நீதிவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்திருந்தது.

இதற்கமைய லலித் கொத்தலாவல கைது செய்யப்பட்டபோதும் அவரது மனைவி வெளிநாடொன்றுக்கு தப்பிச் சென்றுவிட்டார்.

இந்நிலையில் தலைமறைவாகியுள்ள அவரை சர்வதேச பொலிஸாரின் (இன்டர்போல்) உதவியுடன் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தேடி வருவதுடன் இருக்குமிடத்தை அறிந்து கொண்டதும் கைது செய்வதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை சிசிலி நாட்டுக்கு திரும்பி வந்தால் விமான நிலையத்தில் வைத்தே அவரை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர்களுக்கு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இருந்தபோதும் சிசிலி கொத்தலாவல வெளிநாடொன்றில் சிகிச்சை பெற்று வருவதாக அவர் சார்பில் மன்றில் ஆஜரான சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-2)

# யாழ். குடாவில் 600 ஏக்கரில் தென்னை பயிர்ச் செய்கை

## அமைச்சர் தி.மு. ஜயரட்ன தகவல்

யாழ். குடாநாட்டில் தெங்குச் செய்கையை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் 600 ஏக்கரில் தென்னை பயிரிடப்படவுள்ளது.

இதன் முதற் கட்டப் பணிகள் பளையில் ஆரம்பமாகுமென அமைச்சர் தி.மு. ஜயரட்ன தெரிவித்தார்.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய யாழ்ப்பாண குடாநாட்டில் மூன்று இலட்சம் தென்னங்கன்றுகளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் இந்த வருட இறுதிக்குள் இந்த 3 இலட்சம் தென்னங்கன்றுகளும் விநியோகப்பட்டுவிடும் எனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பான ஆரம்ப வைபவம் நாளை நடைபெறவுள்ளது. அமைச்சர் தி.மு. ஜயரட்ன இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

இதேவேளை யாழ். குடாநாட்டிலுள்ள தெங்கு அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான காணிகளை மீண்டும் அதிகார சபைக்குக் கையளிக்கும் நிகழ்வும் நாளை இடம்பெறவுள்ளது.

தென்னங்கன்றுகள் விநியோகத்தின் போது இடம்பெயர்ந்த 850 குடும்பங்களுக்கு மூவாயிரம் தென்னங்கன்றுகள் வழங்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். யாழ்ப்பாணத்திற்குச் செல்லும் அமைச்சர் வெற்றிலைக் கேணிப் பகுதிக்கு விஜயம் செய்து நிலைமைகளைப் பார்வையிடவுள்ளார்.

தென்னந்தோட்ட உரிமையாளர்களையும் சந்தித்துப் பேசவுள்ள அமைச்சர் தேங்காய் எண்ணெய் உற்பத்தி தொழிற்சாலைகளை அமைப்பதற்கான நடவடிக்கைகளையும் ஆராய்வார்.

இதற்கிடையில் யாழ்ப்பாணத்திலும் அச்சுவேலியிலும் தென்னை நாற்று மேடைகள் அமைக்கப்படவிருக்கின்றன. இதற்கான ஆரம்பக் கட்டப் பணிகளும் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (6)

# ஸ்ரீஸ்ரீ ரவிசங்கரின் வாழும் கலை பயிற்சி

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீஸ்ரீ ரவிசங்கரின் வாழும் கலைப் பயிற்சி அறிமுகவுரை நாளை திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு கம்பன் கோட்டத்தில் நடைபெறவுள்ளது.

மேலும் சுதர்சனக்கிரியா, மூச்சுப் பயிற்சி, தியானம், எளிய யோகா ஆகியவை உள்ளடக்கிய அற்புதமான பயிற்சிகள் நாளை மறுதினம் செவ்வாய்கிழமை முதல் 27 ஆம் திகதி சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளதாகவும் அனைவரையும் இதில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு வாழும் கலை அற நிறுவனத்தின் யாழ்.மையத்தினர் கேட்டுக் கொள்கின்றனர். (2-6)

# முட்டாஸ்கடைச் சந்தி கழிவுநீர் வாய்க்கால் துர்நாற்றம் வீசுகின்றது

(வேலணை)


யாழ்ப்பாண முட்டாஸ் கடைச்சந்தியில் மானிப்பாய் வீதியின் அருகால் செல்லும் கழிவுநீர் ஓடும் சாக்கடை வாய்க்கால் சுத்திகரிப்பு செய்யப்படாது உள்ளதால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுகின்றது.

இதனால் இப்பகுதியால் செல்லும் பாதசாரிகளும் நிறுவனங்களுக்கு தமது தேவைகளை பூர்த்தி செய்ய செல்லும் மக்களும் பல அசௌகரியங்களை எதிர்நோக்கின்றனர்.

இதை கவனத்திலெடுப்பார்களா என மக்கள் அங்கலாக்கின்றனர். (6-22)

# செவ்வாய் கிரகம் செல்லத் தயார்...





விண்வெளி ஆய்வில் பல்வேறு உலக நாடுகள் அதிக ஆர்வம் காட்டிவருகின்றன. குறிப்பாக சீனாவும் இந்தியாவும் நிலவுப் பயணத்தில் அதிக கவனம் செலுத்துகின்றன. இந்த நிலையில் அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகள் சிறப்புக் கிரகம் என்றழைக்கப்படும் செவ்வாய்க் கிரகத்தை ஆராய்வதில் தீவிரம் காட்டுகின்றனர்.

ஏற்கனவே அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு நிலையம் செவ்வாய்க் கிரகத்திற்கு ஆய்வுக் கலங்களை அனுப்பியுள்ளது. இந்தக் கலங்கள் அங்கு பல்வேறு ஆய்வுகளை செய்து தகவல்களை அனுப்பி வருகிறது.

இந்தத் தகவல்களின் அடிப்படையில் அடுத்தகட்டமாக செவ்வாய்க் கிரகத்துக்கு விண்வெளி வீரர்களை அனுப்பி ஆய்வு செய்யப் போகிறார்கள். இவர்கள் அங்கு தங்கியிருந்து பல்வேறு ஆய்வுப்பணிகளில் ஈடுபடப் போகிறார்கள். இந்தப் பயணத்துக்கு வீரர்களை தயார் செய்யும் பணிகள் ரஷ்யாவில் உள்ள விண்வெளி ஆய்வு நிலையத்தில் நடந்து வருகிறது.

பூமியில் இருந்து செவ்வாய் கிரகத்துக்கு செல்ல சுமார் 250 நாட்கள் ரொக்கெட்டில் பயணம் செய்யவேண்டும். பின்னர் அங்கு 30 நாட்கள் வரை தங்கியிருந்து ஆய்வுகள் நடத்த வேண்டும். அதன்பின்னர் அங்கிருந்து புறப்பட்டு சுமார் 240 நாட்கள் பயணம் செய்தால் தான் பூமியை வந்தடைய முடியும். ஆக மொத்தம் சுமார் 520 நாட்கள் பூமியை விட்டு விண்வெளியில் இருக்க வேண்டும்.

இதை தாங்கும் அளவுக்கு விண்வெளி வீரர்களின் உடல் தகுதி சிறப்பாக இருக்கவேண்டும். எனவே அத்தகைய தகுதி உள்ளவர்களை தேர்வுசெய்ய சோதனைகள் நடக்கிறது. பல்வேறு உடல் தகுதி, கல்வித்தகுதி தேர்வுகளில் வெற்றிபெற்ற 11 பேர்களைத் தேர்ந்து எடுத்து அவர்களை ஒரு அறையில் 520 நாட்கள் அடைத்து வைத்து சோதனை செய்யப் போகிறார்கள். இந்த அறை ரொக்கெட்டில் இருப்பது போன்ற உணர்வைத் தரும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. ரொக்கெட்டில் பயணம் செய்யும்போது இருக்கும் எடையற்ற தன்மையுடன் இந்தத் தங்கும் அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் செவ்வாய்க்கிரகத்தில் தரை இறங்கி அங்கு தங்கியிருந்து ஆய்வு நடத்துவது போன்ற ஒத்திகை மற்றும் பயிற்சிகளும் இவர்களுக்கு அளிக்கப்படுகிறது.

ரஷ்யாவைச் சேர்ந்த 5 பொறியியலாளர்கள், 2 டாக்டர்கள் மற்றும் பிரான்ஸ், பெல்ஜியம், இத்தாலி மற்றும் சீனா ஆகிய நாடுகளைச் சேர்ந்த தலா ஒரு விண்வெளி வீரர்கள் இந்த சோதனைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.


இவர்களுக்கான சோதனைகள் அடுத்த மாதம் தொடங்கி 520 நாட்களுக்கு நடைபெறும். இவர்கள் தங்கியிருக்கும்போது அவர்களது உடலில் ஏற்படும் மாற்றங்களைக் கண்காணித்து ஆலோசனைகள் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.




# பல்சுவை கதம்பம்

## பேச்சு மொழிகள்

- ஆயிரம் சொற்களைக் கேட்டுக் கொள்; நீ ஒரு வார்த்தை பேசு. – வழக்குமொழி
- சொற்கள் குறைந்தால் குற்றங்கள் குறையும். –சீனா
- நீண்டகால சிறைத்தண்டனைக்கு உரியது நாக்கு. –அரேபியா
- வாயில் இருக்கிறது வழி. – இந்தியா
- ஒருவன் உள்ளத்தை அறிய வேண்டுமானால், அவனுடைய சொற்களைக் கவனி. – சீனா
- புகழத் தெரியாதவனுக்கு பேசவே தெரியாது. – லத்தீன்
- பேசுவதற்கு ஆள் இருந்தால், கேட்பதற்கு ஆள் வருவான். –பின்லாந்து




## வித்தியாசமான விளம்பரம்





மக்களை கவர வித்தியாசமான முறையில் விளம்பரம் செய்வது தயாரிப்பாளர்களின் விருப் பமாகும். அதுபோன்ற ஒரு விளம்பரம் தான் இது.

1893 ஆம் ஆண்டு அமெரிக்காவில் உள்ள சிகாகோ நகரில் இருந்து வெளியான பத்திரிகை ஒன்று இந்த விளம்பரத்தை வெளியிட்டிருந்தது.

அந்தக் காலகட்டத்தில் ஒரு மீற்றர் நீளமுள்ள டெலஸ் ஸ்கோப் தயாரிக்கப் பட்டிருந்தது. அந்தக் காலகட்டத்தில் தயாரிக்கப்பட்ட உலகிலேயே பெரிய டெலஸ் ஸ்கொப் இதுதான்.

இந்த டெலஸ் ஸ்கோப் வைத்து பார்த்த போது அங்கு அதிபுத்திசாலிகள் வாழ்வது தெரிய வந்தது என்றும் அவர்கள் தங்களது சோப்புக்களையே விரும்புகிறார்கள் என்றும் விளம்பரம் செய்திருந்தனர்.

# நுளம்பு கடித்தால் மலேரியா வராது; வந்து விட்டது 'மரபணு நுளம்பு'



மலேரியாவைத் தடுக்க மரபணு மாற்றப்பட்ட நுளம்பு உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நுளம்பு நோயை பரப்புவதற்கு பதிலாக மலேரியா வராமல் தடுக்கும் எதிர்ப்பு சக்தியை பரப்புகிறது என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் ஜப்பானைச் சேர்ந்த ஜி.சி. மருத்துவ பல்கலைக்கழக பேராசிரியர் ஷிகெடே யோஷிடா கூறியதாவது,

இந்த ஆய்வு மனிதர்களிடம் மலேரியாவை பரப்பும் அனோபிலிஸ் வகை நுளம்பை மையமாக வைத்து மேற்கொள்ளப்பட்டது. நுளம்பு மனிதர்களிடம் இருந்து இரத்தத்தை உறிஞ்சும் போது நோய்க் கிருமிகளை பரப்புகிறது.


இதனால் மலேரியா போன்ற நோய்கள் ஏற்பட்டு ஆண்டுக்கு 10 இலட்சம் முதல் 20 இலட்சம் பேர் உயிரிழக்கின்றனர். இதில் பெரும்பாலும் ஆபிரிக்காவை சேர்ந்த குழந்தைகளே உயிரிழக்கின்றனர்.

நுளம்புகளைக் கட்டுப்படுத்துவது மிகவும் கடினமானதாகவுள்ளது. எனவே மரபணு மாற்றப்பட்ட நுளம்புகள் மூலம் மனிதர்களுக்கு தடுப்பு மருந்தை பரப்புவது குறித்து ஆய்வு செய்யப்பட்டது. இதன் மூலம் நுளம்பு கடித்ததும் பாரம்பரிய தடுப்பு மருந்துகள் போன்று பாதுகாப்பான நோய் எதிர்ப்பு திறன் தூண்டப்படுகின்றது.

இவ்வாறான நுளம்புகள் தொடர்ந்து கடிக்கும் போது வாழ்நாள் முழுவதும் நோய் எதிர்ப்பு திறன் இயற்கையாகவே அதிகரிக்கிறது.

இதனால் இந்த நுளம்பு இனம் தீங்கு விளைவிப்பதில் இருந்து ஆதாயம் தருவதாக மாறுகிறது. இந்த ஆய்வு மலேரியாவைக் கட்டுப்படுத்தும் புதிய தொழில்நுட்பம் குறித்த நம்பிக்கையை அதிகரித்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

# சிரேஷ்ட பிரஜைகளின் வங்கிக் கணக்கிற்கு 20 வீத மேலதிக வட்டி வழங்கல் ஆரம்பம்



(கொழும்பு)

60 வயதிற்கு மேற்பட்ட மூத்த பிரஜைகளினால் உரிமம் பெற்ற வங்கிகளில் பேணப்படும் சேமிப்பு மற்றும் நிலையான ரூபா வைப்புகள் மீதான வட்டியின் மீது 20 சத வீதமான மேலதிக வட்டியினை மூத்த பிரஜையொருவருக்கு வருட மொன்றிற்கு ஒரு இலட்சத்து 20 ஆயிரம் என்ற வரையறைக்குட்பட்டு 01.01. 2010 இலிருந்து வழங்குவதென்ற அரசாங்கத்தின் தீர்மானத்திற்கமைய, 2010 ஜனவரி மாதத்திற்குரிய மேலதிக வட்டிக் கொடுப்பனவு 18.03.2010இல் ஆரம்பமாகியுள்ளது என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

இந்தக் கணக்குகள் 2010ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கு முன்பிருந்து பேணப்பட்டதாக இருக்க வேண்டும்.

உரிமம் பெற்ற வங்கிகளில் பேணப்படும் கணக்குகளுக்கே மேலதிக வட்டி முதலில் வழங்கப்படும்.

கடந்த 18 ஆம் திகதி முதல் வழங்கப்படுகின்ற மேலதிக வட்டியில் 2010 ஆம் ஆண்டு ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களுக்கான வட்டி ஒரே நாளில் வழங்கப்படும். வருடமொன்றிற்கு ஒரு இலட்சத்து 20 ஆயிரத்துக்கு மேல் வழங்கப்படமாட்டாது. அமைச்சரவை அங்கீகாரத்துடன் வழங்கப்பட்டிருக்கின்ற மேலதிக வட்டிக்கு வருடமொன்றிற்கு ஆயிரத்து 200 மில்லியன் ரூபாய் செலவாகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலதிக வட்டி பெறும் வைப்புக்களாவன,

அ)மூத்த பிரஜைகளுடைய, ஏற்கனவேயுள்ள அல்லது புதிய மற்றும் கூட்டு அல்லது தனி சேமிப்பு அல்லது நிலையான ரூபா வைப்புகள்.

ஆ)மூத்த பிரஜைகளும் அவர்தம் வாழ்க்கைத் துணையும் கூட்டாகப் பேணும் ஏற்கனவேயுள்ள அல்லது புதிய வைப்புக் கணக்கு / கணக்குகள்.

இ 01.01.2010இற்கு முன்னர் தொழிற்படுகின்ற, (வாழ்க்கைத் துணை தவிர்ந்த ) 60 வயதிற்குட்பட்ட தனிநபர் /தனிநபர்களுடன் இணைந்து மூத்த பிரஜைகள் பேணும் கூட்டு வைப்புக் கணக்குகள். இவ் வகையான புதிய கூட்டுக் கணக்குகள் இத் திட்டத்தின் கீழ் பரிசீலிக்கப்படமாட்டாது எனவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.






எதிர்வரும் ஏப்ரல் 18 முதல் 20ஆம் திகதிவரை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ள யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி-2010 தொடர்பான ஆரம்ப வைபவமும் இதை விளக்குவதற்கான ஊடகவியலாளர் சந்திப்பும் அண்மையில் யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட யாழ்.மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா ,யாழ்.அரச அதிபர் க.கணேஷ் ,யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்துறை மன்றத் தலைவர் கே. பூரணச்சந்திரன் மற்றும் இலங்கை வர்த்தக சங்கப் பிரதிநிதி சூசைதாசன் ஆகியோரைப் படத்தில் காணலாம்.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 113.32 | 114.93 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 172.16 | 175.73 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 153.55 | 157.24 |
| சுவிஸ் பிராங் | 106.23 | 109.58 |
| கனேடிய டொலர் | 110.65 | 114.32 |
| அவுஸ்திரேலிய டொலர் | 103.50 | 106.62 |
| சிங்கப்பூர் டொலர் | 80.84 | 82.72 |
| ஜப்பான் யென் | 1.24 | 1.27 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.51 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 31.04 | |

# 10 ஆண்டுகளை நிறைவு செய்துள்ள இலங்கை-இந்திய வர்த்தக உடன்பாடு

**Indo Lanka**

(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையேயான தடையில்லா வர்த்தக உடன்பாடு·(FTA) பத்து ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ள நிலையில், இது குறித்து கருத்துத் தெரிவித்த பொருளியல் வல்லுநர் ஒருவர், இந்த இரண்டு அயல் தென்னாசிய நாடுகளுக்கிடையிலான வர்த்தகம் இவ் உடன்பாட்டினால் அதிகரித்தது உண்மையே. இருப்பினும் இலங்கைக்கு இவ் உடன்பாட்டை இன்னும் செயல்திறனுள்ளதாக்க ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

இந்தியா, உலகில் வளர்ந்துவரும் முன்னணிப் பொருளாதாரம் கொண்ட நாடு. இலங்கைக்கு அருகில் உள்ள நாடு. இயல்பாகவே இலங்கைப் பொருளாதாரத்தில் தாக்கத்தை செலுத்துகின்ற நாடு எனத் தெரிவித்த ஆய்வு மற்றும் கொள்கைகள் நிறுவகப் பணிப்பாளர் டாக்டர் சமன் ஹெலிகம ,மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை-இந்தியாவுக்கு இடையிலான தடையில்லா வர்த்தக உடன்பாடு 2000-ம் ஆண்டு மார்ச் மாதம் கையெழுத்தானது. அதனையடுத்து வர்தகம் அதிகரித்தது. முதலீடும் அதிகரித்தது.

1978 இற்கும் 1995 இற்கும் இடைப்பட்ட காலத்தில் இந்தியாவில் இருந்து கிடைத்த முதலீடானது, மொத்த வெளிநாட்டு நேரடி முதலீட்டில் 1.2 சதவீதமாகும்.

இலங்கையில் ,1998இல் 1.4 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்த இந்திய முதலீடு 2008 இல் 125.9 மில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்தது. இது மொத்த வெளிநாட்டு நேரடி முதலீட்டில் 14சதவீதமாகும்.

தற்போது இலங்கையில், இந்தியா 2-வது பெரிய முதலீட்டாளராகவும் மலேசியாவுக்கு அடுத்த நிலையிலும் உள்ளது.

# அமெரிக்காவில் 3 மாதங்களில் 30 வங்கிகள் முறிவடைந்தன

(நியூயோர்க்)




நடப்பு 2010 ஆம் ஆண்டில் இதுவரையான காலத்தில் ,அதாவது சுமார் 3 மாதங்களில் ,அமெரிக்காவில் சுமார் 30 வங்கிகள் திவாலாகியுள்ளன. ஆக ,திவாலாகும் வங்கிகளின் எண்ணிக்கை மாதத்திற்கு 10 என்ற அளவில் உள்ளது. நடப்பு மார்ச் மாதத்தில் மட்டும் இதுவரை அங்கு 8 வங்கிகள் முறிவடைந்துள்ளன. கடந்த 2008 செப்ரம்பர் மாதத்தில் லெஹ்மன் பிரதர்ஸ் திவாலனதையடுத்து ,அமெரிக்காவில் வங்கிகள் திவாலாவது தொடர் கதையாகி வருகின்றது. அம் மாதத்தில் இருந்து இதுவரையிலமாக , அமெரிக்காவில் 184 வங்கிகள் திவாலாகியுள்ளன.

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

| துறை | புள்ளி | அதிகரிப்பு/ குறைவு |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 3744.92 | (10.27) |
| மிலங்கா விலைச்சுட்டி | 4319.22 | (0.37) |
| புரள்வு (ரூபா.மில்லியன்) | 576.08 | |

***உயர்வடைந்த பங்குகள் :*** ஜோன் கீல்ஸ் ஹோல்டிங் ,ஹேலீஸ் ,குன்ரஸ் &கம்பனி ,காடஷன்ஸ் ,கார்கில்ஸ் ,

***சரிவைக் காட்டிய பங்குகள் :*** நெஸ்ரல் லங்கா ,சிறிலங்கா ரெலிகொம் ,அற்கின் ஸ்பென்ஸ் ,த புக்கிட் ,சிலோன் ரொபாக்கோ.

## தொழிற்றுறையில் தமிழகம் முன்னணியில்

# இந்திய மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் தமிழகத்தில் முதலிட ஆர்வம்-ஸ்டாலின்

(சென்னை)

இந்திய வெளிநாட்டு நிறுவனங்களுக்கான உலகளாவிய முதலீட்டு இலக்கிடமாக தமிழகம் உள்ளது எனவும் இந்த நிதியாண்டில் தமிழகத்திற்கு வரும் முதலீடு 60 ஆயிரம் கோடியாக இருக்கும் என எதிர்பார்க்கிறோம் என தமிழக துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இந்திய தொழில் வர்த்தக சபை கூட்டமைப்பு(எப்.ஐ.சி.சி.ஐ) மற்றும் தமிழக தொழில் வர்த்தக சபையின் சார்பில் தயாரிக்கப்பட்ட அட்வான்டேஜ் தமிழ்நாடு என்ற புத்தக வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

தமிழகத்தில் 21 ஆயிரத்து 42 தொழிற்சாலைகள் உள்ளன. இதில் 15 இலட்சம் பேர் பணிபுரிகின்றனர்.

இந்திய பொருளாதார கண்காணிப்பு மையம் வெளியிட்டுள்ள தகவலின்படி ,2006-2009 ஆண்டுகளில் தமிழகத்தில் தொழில்துறையின் முதலீடு 3.57 மடங்கு உயர்ந்துள்ளது. சர்வதேச பொருளாதார நெருக்கடியிலும் இச் சாதனை படைக்கப்பட்டுள்ளது.

முதல்வர் கருணாநிதி தமிழகத்தை சர்வதேச உற்பத்தியாளர்களின் தளமாக மாற்ற வேண்டும் என கொள்கை பூண்டுள்ளார் எனத் தெரிவித்தார்.

இந்திய மாநிலங்களிலேயே அதிக தொழிற்சாலைகள் தமிழகத்



தில்தான் உள்ளன என மத்திய அரசு வெளியிட்ட புள்ளி விபரம் தெரிவிக்கிறது.

தொழில்துறையினர் தமிழ் நாட்டில் உள்ள முதலீட்டு வாய்ப்புகளைப் பயன்படுத்தி ,மாநிலத்தின் வளர்ச்சியில் பங்கு பெறவேண்டும் என்றார் ஸ்டாலின்.

## சீனாவிலிருந்து வெளியேற கூகுள் முடிவு

கருத்து வேறுபாடு காரணமாக, கூகுள் நிறுவனம் சீனாவில் இருந்து வெளியேறுவது 99.9 வீதம் உறுதியாகி விட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. தேடுதல் சேவை வழங்குவதில் சர்வதேச புகழ் பெற்ற கூகுள் நிறுவனத்தின் சேவைக்கு, சீன அரசு சில கட்டுப்பாடுகளை விதித்தது. இதை கூகுள் ஏற்க மறுத்ததால் பிரச்சினை வெடித்தது. இதையடுத்து கூகுள் வெளியேறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஊடகம், பொழுதுபோக்குத்துறை வருவாய் ஒரு இலட்சம் கோடியாகும்




இந்திய ஊடக மற்றும் பொழுதுபோக்குத்துறை நிறுவனங்களால் ஈட்டப்படும் மொத்த வருவாய் ,வரும் 2014ஆம் ஆண்டுக்குள் ஒரு இலட்சத்து 9ஆயிரத்து 100 கோடியாக அதிகரிக்கும் என இந்திய வர்த்தக மற்றும் தொழில் கூட்டமைப்பு மற்றும் கே.பி. எம்.ஜி.ஆகியவை இணைந்து வெளியிட்ட அறிக்கை வாயிலாக தெரியவந்துள்ளது. இது இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2 சத வீதமாகும்.

2009ஆம் ஆண்டில் இத் துறை நிறுவனங்களின் வருவாய் 1.4 வீதம் மட்டுமே அதிகரித்து 58 ஆயிரத்து 700 கோடியாக சற்று உயர்ந்திருந்தது. அடுத்த 5 ஆண்டுகளில் விளம்பர வருவாய் ஆண்டுக்கு 14 சதவீதம் அதிகரிக்குமெனமதிப்பிடப்பட்டுள்ளது.

ஊடகம் மற்றும் பொழுதுபோக்குத் துறைகளில் சினிமா, பத்திரிகை , வானொலி ,தொலைக்காட்சி, இசை ,இணையத்தளம் ,வீடியோ விளையாட்டுகள் அனிமேஷன் ஆகிய துறைகள் அடங்கும்.

கு.முருகதாஸ்

# தமிழ்த் தேசியத்தின் மீது பற்றுறுதி உடையவர்களை தெரிவு செய்ய வேண்டும்

## கூட்டமைப்பின் வேட்பாளர் சீ.வி.கே.சிவஞானம்



யுத்தத்தின் பின்னர் இன்று தமிழ் அரசியலில் பிளவுகளும் சிதைவுகளும் உடைவுகளும் ஏற்பட்டு மக்களை கடுமையான குழப்பத்திற்கும் துயரத்திற்கும் உள்ளாகியிருக்கின்றனர்.

இவ்வாறு தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் வேட்பாளரும் யாழ். மாநகர சபையின் முன்னாள் ஆணையாளருமான சீ.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரசார கருத்துரையில் அவர்க மேலும் தெரிவித்தாவது,

இந்தப் பிளவுகளையும் சிதைவுகளையும் உடைவுகளையும் மிகுந்த வேதனையுடன் பார்க்கின்றேன். ஆயுதப் போராட்டத்திற்கு முன்பும் ஒற்றுமை நோக்கி தமிழர் ஐக்கிய விடுதலைக்கூட்டணி உருவாக்கப்பட்டது. அதுவும் சிதைந்து பெயரளவுக்குக் கூட்டணியாக கட்சியாகவுள்ளது. ஆயுதப் போராட்ட காலத்தில் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சிதறிப்போய் 3 அணிகளாக நிற்பதும் கவலைக்குரியதும் ஏமாற்றத்திற்கும் உரியதுமாகும். இவை எமது தமிழ்த் தேசிய உணர்வுகளிலும் முன்னெடுப்புக்களிலும் குறுகிய கால பாதிப்புக்களை ஏற்படுத்தலாம்.

இந்தப் பிளவுகளின் முதல் விளைவாக நாம் ஒரு தேசிய பட்டியல் ஆசனத்தை ஏற்கனவே இழந்துவிட்டோம் என்றே நான் நினைக்கின்றேன். நுண்ணிய வார்த்தைப் பிரயோகங்களில் முரண்படுவதும் சேறு பூசுவதும் தமிழ் பேசும் மக்கள் நலன் சார்ந்ததாக அல்ல. இவை மறுதரப்புக்கு உதவுவதாகவே அமையும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தான் தமிழ் மக்களின் பாதுகாவல் அரணாக இருக்கின்றது. இனியும் இருக்க வேண்டும் என மக்கள் கருதுகிறார்கள் என்பதுடன் அவ்வாறே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்பட வேண்டும் எனவும் மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். அடிப்படை இலட்சியங்களில் இருந்து பிறழாமல் அது இருக்க வேண்டும். அதுவே தமிழ் தேசியக்கூட்டமைப்பை பலப்படுத்திக் கொண்டிருக்கும்.

2004ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் பின்பற்றப்பட்ட வழிமுறைகள் பொருத்தமானவை அல்ல என்பதை பலர் பகிரங்கமாக கூறியுள்ளார்கள். தரும வாக்குகள் பற்றி பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் அவர்கள் பகிரங்கமாக விமர்ச்சித்திருக்கிறார். இது பற்றியாருக்கு விமர்சனம் செய்யவேண்டுமோ அவருக்கு அதை நான் தெளிவாகவும் துணிவாகவும் தெரியப்படுத்தினேன். இந்தத்தேர்தலிலும் மக்கள் தமது பொறுப்புக்களை உணர்ந்து தமது வாக்குகளை பிரயோகித்து வேட்பாளர்களை ஒழுங்காக மதிப்பீடு செய்து தெரிவு செய்வதற்கான வாய்ப்பை எதிர்வரும் தேர்தல் வழங்குகிறது.

மக்கள் இந்தக் கடமையை சரியாக செய்தால் பல குறைபாடுகள் நீங்கும்.பிழையான தெரிவுகளை மேற்கொண்டு விட்டு பாராளுமன்ற உறுப்பினர்களை காணவில்லை. பிரதேசத்திற்கு வருவதில்லை. அங்கலாய்படுவதிலும் விமர்ச்சிப்பதிலும் குற்றம் சுமத்துவதிலும் தேடித்திரிவதிலும் அர்த்தமில்லை.

இலங்கை அரசாங்கம் பல வழிகளிலும் தமிழ் தலைமைகளை பலவீனப்படுத்தி சிதறடிக்க பாரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்த முயற்சிகளை முறியடிக்க வேண்டுமாயின் தமிழ்த்தேசியத்தின் பால் அசைக்க முடியாத பற்றுறுதி கொண்டவர்கள் என நிரூபிக்கப்பட்டவர்களை தெரிவு செய்ய வேண் டும். அவர்கள் அந்த பற்றுறுதி நிலையில் ஸ்திரமாக நின்றுகொண்டு வீர வசனங்களை மட்டும் பேசாமல் மக்களது சமூகப், பொருளாதார, வாழ்வாதாரம், மீள்குடியேற்றம், புனர் வாழ்வு விடயங்களிலும் தீவிர அக்கறை செலுத்தி செயற்பட வேண்டும்.

இணைந்த வடக்கு, கிழக்கு அது தமிழ் பேசும் மக்களின் வரலாற்று ரீதியான வாழ்விடம்.அம் மக்களுக்கு தன்னாட்சி மற்றும் சுயநிர்ணய உரிமை உண்டு என்ற அரசியல் எதிர்பார்ப்புக்களுடன் விபரிக்க முடியாத மனித அழிவுகளையும் சொத்து இழப்புக்களையும் உட்கட்டுமான இழப்புக்களையும் சீர் செய்யும் வகையில் உரிய திட்டங்களை வகுத்து சர்வதேச உதவிகளுடனும் குறிப்பாக எமது புலம் பெயர் தமிழ் மக்களின் உதவிகளுடன் செயற்படுத்த வேண்டும். வெளிப்படை தன்மையுடையதும் நம்பகத் தன்மையுடையதுமான ஒரு கட்டமைப்பு இதற்காக உருவாக்கப்படவேண்டும்.

எமது மக்கள் எமக்கென தனியான பண்பாட்டு, கலாசார விழுமியங்கள் உண்டு என்பதை உணர்ந்து அவற்றை பாதுகாக்க முன்வர வேண்டும் என மிகவும் பணிவன்போடு வேண்டுகிறேன்.

எமது இழந்த இன அடையாளங்களை அழித்துவிட பல வழிகளில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. சிறுபான்மை இனமே இங்கு இல்லை என்று கூறுவதும் இதன் ஒரு அம்சமே.

இப்பொழுதே நாம் விழித்துக்கொள்ளா விட்டால் தமிழினம் என்று ஒன்று இந்த நாட்டில் இல்லை என்ற நிலையை தென்னிலங்கை அரசும் இனவாதிகளும் மிக விரைவில் உருவாக்கி விடுவார்கள். எமது மக்கள் விழிப்படைய வேண்டும். (ந)

# வன்னி யுத்தத்தை அனுபவித்த எனக்கு தாயகத்தின் அவசியம் நன்கு தெரியும்

## டாக்டர் திருலோகமூர்த்தி தெரிவிப்பு



யுத்தத்தால் ஈழ மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக கிளிநொச்சி மாவட்ட மக்கள் பெரும் பாதிப்பை சந்தித்துள்ளனர். என் குடும்பமும் மிகப்பெரிய அழிவை சந்தித்தது. இது இப்படியிருக்க அரசு எம் மக்களுக்கு தேவையான உதவிகளை செய்தது கிடையாது. மீள் குடியேற்றம் கூட இன்னும் ஒழுங்கான முறையில் இடம்பெறவில்லை. அகதி வாழ்க்கை தொடர்கிறது. இவ்வாறு அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் வேட்பாளர் கந்தசாமி திருலோகமூர்த்தி தெரிவித்தார்.


தேர்தல் பிரசாரக் கருத்துரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கை தீவின் வட கிழக்கு பிராந்தியம் தமிழர்களின் தாயகம். தமிழர்கள் தனித்துவமான இனம் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் எமது முன்னணி தமது பயணத்தை இப் பாராளுமன்ற தேர்தலின் ஊடாக தொடர்கின்றது. நான் இத் தேர்தலில் வெற்றி பெற்றதும் வன்னி மக்களின் குரலாகவும், தமிழ் மக்களின் குரலாகவும், உள் நாட்டிலும், வெளிநாட்டிலும் இருப்பேன். இதற்காக எந்தவித சுயநலனும் இல்லாது உழைப்பேன். தமிழ் மக்கள் இன்று பல்வேறு வகைகளில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். குறிப்பாக யுத்தத்தாலும்,இடம்பெயர்வாலும் வார்த்தைகளாலும் விபரிக்க முடியாத அளவிற்கு துயரங்களை அனுபவித்துக்கொண்டிருக்கி றார்கள். இந்த நிலையில் சில கட்சி வேட் பாளர்கள் எப்படியாவது வென்று விடவேண்டும் என்ற நோக்கில் நடுநிலைமை தவறுகின்றனர்.

இன்றைய சூழ்நிலையில் எம் மக்கள் ஒரு தேர்தலை எதிர்நோக்கும் சக்தியற்றவர்களாக இருக்கின்றார்கள். இவர்கள் முன் வேட்பாளர்கள் தமது கொள்கைகளையும் செயல் திட்டங்களையும்கொண்டு சொல்ல வேண்டும்இ அதனை விடுத்து எதிர்வேட்பாளர்களை கொச்சைப்படுத்தும் வகையில் இல்லாதவற்றைக் கூறி பிரசாரம் செய்வது அநாகரிகமான செயலாகும். (ந)




# தேர்தலில் ஏன் போட்டியிடுகின்றோம் சுயேட்சைக்குழு 03- அன்ரனி விளக்கம்



தமிழ் மக்கள் மத்தியில் வாழும் உரிமை குறைந்த எமது மக்களின் சமூக சமத்துவத்துக்காகவும் ஏனைய நலன்களைப் பேணுவதற்காகவும் தீவிர அக்கறையுடன் செயற்பட்டு வந்த ஒரு தாபனம் அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபை.

இந்தச்சபையின் மதிப்புக்குரிய பெருந் தலைவராக இருந்து அரும்பணியாற்றியவர் M.C.சுப்பிரமணியம் அவர்கள். அன்னாரின் பாராளுமன்ற நியமன உறுப்பினர் பதவி, உரிமை குறைந்த எமது மக்களின் பிரச்சினைகளை அரசு மட்டத்தில் எடுத்துச் சொல்வதற்கும், அதற்கான பரிகாரத்தைக் காண்பதற்கும் வெகுவாய்ப்பாக அமைந்திருந்தது.

கடந்த 30 ஆண்டுகால அரசியல் நிலைமைகள் காரணமாக அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் கட்டமைப்புக்கள் யாவும் சிதைந்து மகாசபை வலுவிழந்து போயிற்று என்பது யாவரும் அறிந்த ஓர் உண்மை.

இன்று உருவாகியிருக்கும் புதிய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு மகாசபைத் தலைவர் M.C. சுப்பிரமணியம் அவர்கள் வகித்த பாராளுமன்ற உறுப்பினர் பதவி, அவர் ஆற்றிய சமூகப்பணிகளுக்கு உறுதுணையாக இருந்து வந்திருக்கின்றது என்பதனைக் கவனத்தில் கொண்டு, அவர் காட்டிய வழியைப் பின்பற்றி, எதிர்வரும் பாராளு மன்றத் தேர்தலில் போட்டியிடத் தீர்மானித் துள்ளோம்.

அத்தீர்மானத்துக்கமையவே அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் சார்பில் சுயேட்சைக் குழுவாக இப்பாராளு மன்றத் தேர்தலில் போட்டியிடுகின்றோம்.(ந)

தேடற்கரிய தேவாதி தேவனை
தேடிக் கண்டு கொண்டேன்.
– மாணிக்கவாசகர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# தேடிக் கண்டு கொள்வோம் தேடற்கரிய வேட்பாளரை

நாடாளுமன்றத் தேர்தல்–2010 யாழ்.மாவட்டத்தில் பதினைந்து அரசியல் கட்சிகளும் பன்னிரண்டு சுயேட்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன.

ஆள்களின் எண்ணிக்கையில் கூறுவதாயின், 324 பேர் போட்டியிடுகின்றனர். இதற்காக ஒன்றரை அடி நீளமான வாக்குச் சீட்டுத் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஒன்றரை அடி நீளமான வாக்குச் சீட்டில் தாம் விரும்பும் வாக்காளர்களைத் தேடிக் கண்டுபிடித்து அவர்களுக்குப் புள்ளடிபோடும் பணி சாதாரணமானதல்ல.

என்றுமில்லாதவாறு ஒன்றரை அடி நீளத்தில் வாக்குச் சீட்டிருப்பதால் வாக்காளர்கள் சிரமப்படுவது மட்டுமன்றி வேட்பாளர்களைத் தேடிக் கண்டுபிடிப்பது–அதனால் நேரம் தாமதமாவது– இது தொடர்பில் தேர்தல் பணியாளர்கள் என்ன நினைப்பார்களோ, ஏது நினைப்பார்களோ என்ற பதகளிப்பு, முடிவில் ஏதோவொரு சின்னத்திற்கு நேரே புள்ளடியிட்டு விட்டு அங்கிருந்து வெளியேறும் பரிதாபமே மிஞ்சும்.

என்ன செய்வது? எல்லாம் எங்கள் தலைவிதி. எனினும் வேட்பாளர்களைத் தேடிப் புள்ளடி போடுகின்ற இந்த நிலைமை ஒரு பெரும் தத்துவத்தையும் சுட்டி நிற்கின்றது.

அதாவது, இப்போது புள்ளடி போடுவதற்காக வாக்குச் சீட்டில் யாரைத் தேடுகின்றீர்களோ அவரை அடுத்த ஐந்து ஆண்டுகளாகத் தேடுவீர்கள் என்ற தத்துவத்தை இது உணர்த்துவதாகவும் உள்ளது.

எதுவாயினும், தேடிக் கண்டுகொள்ள வேண்டிய தேவரும் காணாப் பெம்மானைக் கண்டு கொள்ள நாம் முயற்சி எடுக்காமையால் இப்போது வேட்பாளர்களைத் தேடிக் கண்டுகொள்ளும் பணியில் இறங்கியுள்ளோம்.

தேவையான காரியத்தைச் செய்யத் தவறும் போது தேவையில்லா விடயத்தைச் செய்யும் சூழ்நிலை உருவாகுவது தவிர்க்க முடியாதது தான்.

பரவாயில்லை, 324 வேட்பாளப் பெருமக்களின் பட்டியலில் தேவையானவரைத் தேடுவது ஒன்றும் எங்கள் வாக்காளப் பெருமக்களுக்கு கடினமான காரியமன்று.

அவர்கள் காணாமல் போன தங்கள் உறவுகளை இன்றுவரைத் தேடிக் கொண்டே இருக்கின்றார்கள். இதுவரை அவர்கள் கிடைக்கவில்லை. இருந்தும் எங்கள் முயற்சியும் நிற்கவில்லை.

இந்த நிலையில் 324 வேட்பாளர்களில் யாரைத் தெரிவு செய்வது? தேடுவோம், தேடிக் கண்டுகொள்வோம். அந்தத் தேடலுக்கு எங்கள் மனச்சாட்சிகள் உதவட்டும்.

# தேர்தலின் பின் நாட்டில் ஒழுக்கம் முழுமையாக நிலை நாட்டப்படும்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலின் பின்னர் நாட்டில் ஒழுக்கம் முழுமையாக நிலை நாட்டப்படும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதற்கமைய ஒழுக்கம் நிலைநாட்டப்படாத பட்சத்தில் நாட்டில் எந்தவொரு அபிவிருத்தித் திட்டத்தையும் முன்னெடுக்க முடியாது என சுட்டிக்காட்டியுள்ளார்.

கண்டி, கெட்டம்பே பொது விளையாட்டரங்களில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்ட போதே இதனைக் குறிப்பிட்டுள்ளர். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கும் போது ஒழுக்கமின்மை காரணமாக பல நாடுகளும் அரசாங்களும் பாதகமான விளைவுகளை எதிர்நோக்கியுள்ளன.



இவ்வாறு கல்வியறிவு ஒழுக்கம் நிறைந்தவர்களை பாரா ளுமன்றத்திற்கு தெரிவு செய்யாவிட்டால் ஒழுக்கத்தை கட்டிக் காப்பதில் சிக்கல் நிலை உருவாகுமென்றார்.

மேலும் 1.8 மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் தமக்கு மேலதிகமாக வாக்களித்துள்ளனர்.

எந்தவொரு நாட்டிற்கும் மண்டியிடாத அமைதியானதும் சுபீட்சமானதுமான நாடு ஒன்றை உருவாக்க வேண்டும் என்பதே மக்களின் பிரதான அபிலாசை என்றார்.

(2–6)

# தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பட்டப்படிப்பு நெறிக்கான விண்ணப்பம்

## இடம்பெயர்ந்தவர்களுக்கு மாற்று ஏற்பாடு

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக்கழக கணனிப் பிரிவு யாழ்ப்பாண பல்கலைக்கழக வவுனியா வளாகம், ரஜரட்ட பல்கலைக் கழகம் என்பவற்றில் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பப் பட்டப்படிப்பு கற்கை நெறிக்கான மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான பொது உளச்சார்பு பரீட்சை எதிர் வரும் ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப் பட்டிருக்கின்றது.

இந்தப் பரீட்சை கொழும்பு, கண்டி, மிகிந்தலை, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இது தொடர்பாக ஏற்கனவே ஊடகங்களில் வெளிவந்த விளம்பரங்களின்படி, இணையவழித் தடத்தின் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும் எனக் கோரப்பட்டிருந்தது.

எனினும், இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களிலும், மீள்குடியேற்றம் செய்யப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் நன்மை கருதி, இந்த நிபந்தனை தளர்த்தப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இணையவழித் தடத்தின் ஊடாக விண்ணப்பிக்க வசதியற்றவர்கள், தமது பிரதேச செயலகங்களில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று அவற்றின் ஊடாக விண்ணப்பிக்க முடியும். எதிர்வரும் 31.03.2010 ஆம் திகதி வரையில் இதற்கென காலஅவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக யாழ். பல்கலைக் கழக வவுனியா வளாக முதல்வர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய கல்விப் பொதுத் தராதர சாதாரணம் மற்றும் உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்ததற்கான உறுதி செய்யப்பட்ட சான்றிதழ் பிரதிகள், தேசிய அடையாள அட்டை அல்லது அஞ்சல் திணைக்களத்தின் அடையாள அட்டையின் உறுதிசெய்யப்பட்ட பிரதி என்பவற்றோடு, மக்கள் வங்கியின் 086100121190316 என்ற கணக்கு இலக்கத்தில் 500 ரூபா பரீட்சைக் கட்டணம் வைப்புச் செய்யப்பட்டமைக்கான பற்றுச்சீட்டையும், தமது பிரதேச செயலாளரின் பரிந்துரையுடன் இணைத்து விண்ணப்பங்களை யாழ்.பல்கலைக் கழகத்தின் வவுனியா வளாகத்தில் கையளிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

மேலதிக தகவல்களை 0242223317 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2–6)

# வன்னி மாவட்ட வாக்குகளை கணக்கிட 21 வாக்களிப்பு நிலையங்கள் ஏற்பாடு

(கொழும்பு)

பாராளுமன்றத் தேர்தலின் போது மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களைக் கொண்ட வன்னி தேர்தல் மாவட்ட வாக்குகளைக் கணக்கிடுவதற்காக 21 வாக்கெண்ணும் நிலையங்கள் அமைக்கப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் செயலகத்தில் ஆறு வாக்கெண்ணும் நிலையங்களும் வவுனியாவில் 15 நிலையங்களும் அமைக்கப்படவுள்ளன. வாக்குச் சீட்டுகள் நீண்டதால் இம்முறை மேலதிக வாக்குப் பெட்டிகளும் வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுப்பப்படவுள்ளன. வாக்கெண்ணும் நிலையங்களில் அலுவலர்களும் வழமைக்கு மாறாக கூடுதலானவர்கள் அமர்த்தப்படவுள்ளதாக தெரியவருகின்றது.

வன்னியில் இரண்டு இலட்சத்து 67 ஆயிரம் பேர் வாக்களிக்கும் தகைமை பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.(2–6)

# இனி பாவம் செய்யாதே

## பரமபிதா காட்டிய பாதை


இந்த பூவுலகில் மானிட உடல் கொண்டு பிறக்கின்ற ஒவ்வொருவரும் தவறு செய்யாமல் இருப்பதில்லை. யாவரும் தவறு செய்கின்றவரே முதல் பெற்றோர்களின் பாவத்தினால் வந்த விளைவு இது.

ஆனால் தவறு செய்தபின் அதிலிருந்து விலகி நல்லவராக வாழ முடியும். இதுதான் தெய்வீக பண்பு. இதைப் புனித பண்பாகவும் கொள்ளலாம். எத்தனையோ புனிதர்கள் தொடக்கத்தில் தவறு செய்தவர்கள்தான் .ஆனால் பிறகு மனம் வருந்தி நல்லவர்களாக வாழ்ந்ததால் தான் அவர்கள் புனிதர்களாக உயர்த்தப்பட்டார்கள்.

ஆம், இந்த உலகம் பாவச் சூழல் மலிந்த உலகம். தவறுகளைத் தூண்டுகின்ற சமூகம் எனவே மிகவும்; கவனமோடு வாழவேண்டும். அதேவேளையில் இந்த உலகம் போலிகளும், பச்சோந்திகளும் நிஹூறந்த உலகம். வெளிவேடம்தான் பளபளக்கும்; உள்ளத்திலோ நாற்றமடிக்கும். எனவே கவனமாயிருந்து செயல்பட வேண்டும். நமது வாழ்வே முள்ளின் மேல் நடப்ப தாகும்.

ஆம், இன்று தவக்காலத்தின் 5ஆம் ஞாயிறைக் கொண்டாடுகிறோம். இன்றைய நற்செய்தியில் இயேசுவைச் சோதிக்க, வலையில் பிடிக்க ஒரு பெரிய சதியே நடக்கிறது.

அதாவது விபச்சாரத்தில் பிடிபட்ட பெண்ணை பரிசேயக் கூட்டம் ஒருமனித மாண்போடு நடத்தாமல் நாயைப் போல கல்லால் அடித்து இழுத்துக் கொண்டு வருகின்றனர். ஒரு பெண்ணுக்கு யூதசமயத்திலும், சமூகத்திலும், சட்டத்திலும் என்ன நிலை இருந்தது என்ப தற்கு இதுவே சாட்சி.



ஆனால் இயேசுவோ அப்பெண்ணை அம்மா என்று அழைக்கின்றார் தன் தாய்க்கு சமமாக அழைத்து அவளிடம் களங்கப்பட்ட மனிதத்திற்கு மாண்பைக் கொடுக்கின்றார். இங்கு தான் இயேசுவின் பரிவுள்ளம் கனிவு உள்ளம் வெளிப்படுகின்றன . ''யாரும் உனக்குத் தீர்ப்பிடவில்லையா?'' இல்லை ஆண் டவரே எனக்கூற ; அப்படி யென்றால் "நானும் தீர்ப்பிடேன், இனிமேல் பாவம் செய்யாதீர்" என்றார்.

ஆம்,இங்கு தான் இயேசுவின் மன்னிப்புத் தன்மையும் , இரக்கத்தன்மையும் வெளிப்படுகின்றன. தவறு செய்தவர்களை தண்டிப்பது அல்ல மாறாக திருத்த வேண்டும் என்ற நிலையில் இனிமேல் பாவம் செய்யாதீர் என்று சொல்லி அனுப்புகிறார்.

ஆம், அன்பின் விளையாததையும் மன்னிப்பில் விளைவிக்கலாம். கல்லில் கனியாததையும் கனிவில் கனியவைக்கலாம் அன்பின் வெளிப்பாடே மன்னிப்பு. எனவே இந்தக் தவக்காலத்தில் இனி பாவம் செய்யாமலும் பிறரின் தவறை பெரிதுபடுத்தாமலும் மன்னித்து வாழ்வோம்.

*ஜோன் ராபேர்ட்*

# யுத்தத்தால் ஏற்படும் பேரழிவைத்தடுக்கவே பிரபாகரனுக்கு கடிதம் எழுதினேன்

என் அன்புக்கினிய தமிழ் மக்களே!

என்னைப்பற்றி விடுதலைப்புலிகளிடம் தவறான கருத்துக்களை விதைத்தவர்கள் அதன் மூலம் என் அரசியல் ஆளுமையை ஓரங்கட்டி தங்கள் அரசியல் சூழ்ச்சிகளை அரங்கேற்ற நினைத்தவர்கள் இப்போது எங்கே நிற்கிறார்கள் என்பதை ஒரு கணம் சிந்தியுங்கள்.

விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு நான் எழுதிய அர்த்தமுடைய கடிதங்களை மீளவும் ஒரு கணம் உங்கள் சிந்தனைக்காகத் தருகின்றேன்.

என்னை ஓரங்கட்டி விட்டு தாம் நல்லவர்கள் போல் நடித்து ஒன்றுபட்டவர்கள் விடுதலைப்புலிகள் போரில் தோற்கடிக்கப்பட்டு விட்டார்கள் என்றவுடன் குத்துப்பட்டு குதறிக் கொண்டு பிரிந்து போனார்கள். எப்படி இருக்கிறது பார்த்தீர்களா?

இவர்களா? உங்கள் பிரதிநிதிகள்.

என் அன்புக்கினிய தமிழ் மக்களே! உங்கள் வாக்குகளை உங்கள் இதயம் நிறைந்த உதயசூரியனுக்குப் போடுங்கள்.

பாராளுமன்றில் துணிவுடன் பேசுவேன் தமிழர் உரிமையைத் தாருங்கள் என முழங்குவோம். உலகம் என் என் குரலுக்கு நிச்சயம் செவி சாய்க்கும் இது உறுதி.

இதோ நான் விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு எழுதிய யதார்த்தமான கடிதங்கள்.

அன்புடன்
வீ.ஆனந்தசங்கரி.

## சிந்திக்க விடாமல் சிலர் அரசியல் வர்த்தகம் நடத்தினர்



திரு.வே.பிரபாகரன்,
தலைவர்,தமிழீழவிடுதலைப்புலிகள்,
கிளிநொச்சி.

### தீர்வுக்கு ஒரே வழி

அன்புள்ள தம்பி !

கடந்த மூன்று, நான்கு ஆண்டு காலமாக எனது கடிதங்களுக்கு நீர் பதில் அனுப்பாதமை துரதிஸ்டமே. இக் கடிதத்திற்கும் உமது பதிலை நான் எதிர்பார்க்கவில்லை. இருப்பினும் கசப்பானாலும் இக் கடிதத்தை கவனம் செலுத்திப் படிப்பீர் என எதிர் பார்க்கின்றேன். நான் இந்த நாட்டு மக்கள் மீதும் குறிப்பாக தமிழ் பேசும் மக்கள் மீதும் மிக அக்கறை கொண்டுள்ளேன் என்பதை புரிந்து கொள்ளவும் நிலமை கட்டுக்கு மீறி செல்வதால் மேற்கொண்டு தாமதிக்காமல் மிகவும் துன்பப்படும் நாட்டு மக்களுக்கு அமைதியையும் சமாதானத்தையும் கொண்டு வர வேண்டிய நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இங்கே குறிப்பிடும் சில விடயங்கள் என்னால் முன்பு எழுதப்பட்ட கடிதங்களில் குறிப்பிடப்படாதவையாகும். இன்றைய பரிதாபமான நிலையில் எமது மக்கள் வாழ்வதற்கு முழுப் பொறுப்பையும் நீரே ஏற்க வேண்டிய காலம் வந்து விட்டது.

உமக்கு விரும்பத்தகாததாயிருந்தாலும் கடந்த காலத்தை மறந்து இலங்கையின் அனைத்து மக்களினதும் சுபீட்சமான வாழ்விற்கு பொறுப்புடனும் அவதானத்துடனும் செயற்படுமாறு கேட்டுக் கொள்கின்றேன். ஏனையோர் சிலர் விடுதலைப்புலிகளை தமிழ் மக்களின் ஏகப் பிரதி நிதிகளாக முன்னிலைப் படுத்துவது போல் நான் செய்ய மாட்டேன். ஏனெனில் உமது கொடூரமான செயல்கள் காரணமாகதமிழ் மக்களால் அவ்வாறு நீங்கள் கணிக்கப்படவில்லை. உலகிலேயே மிக கொடூரமானவர் என்ற பெயரை நீங்கள் சம்பாதித்துள்ளீர்கள். நாட்டு மக்களுக்கு தினமும் பயத்தையும் பீதியையும் எற்படுத்துவதன் மூலம் உங்களுடைய மதிப்பை மிக வேகமாக இழந்துவருகின்றீர்கள் என்பதை அறியமாட்டீர்கள். உங்களுடைய பயங்கர ஆட்சியால் என்னைப் போன்ற ஒரு சிலர் தவிர சகல தமிழர்களின் குரலையும் அமைதிப்படுத்திவிட்டீர்கள். எனது காலத்திலேயே எமது இனப் பிரச்சினைக்கு தீர்வை காண உதவத்தவறுவீர்களேயானால் என்றும் தீர்வைக் காண முடியாது. தயவுசெய்து பிரிவினைக் கோரிக்கையை கைவிட்டு ஐக்கிய இலங்கைக்குள் சமஸ்டி அடிப்படையிலான தீர்வை ஏற்பீர்களேயா னால் அதற்கு பெரும் வரவேற்பு கிடைப்பது மட்டுமல்ல ஆச்சரியப்படக்கூடிய விதத்தில் எதிர்பாராத வர்களின் ஆதரவு கூட கிடைக்கும்.

கடந்த காலத்தில் நிகழ்ந்த சில கசப்பான சம்பவங்களை உமது ஞாபகத்திற்கு கொண்டுவர விரும்புகின்றேன். உம்மை அவமானப்படுத்தவோ அல்லது சங்கடப் படுத்தவோ அல்ல. தமிழர்களை இரண்டாம் தரப் பிரஜைகளாக கருதும் சிலரது கண்களை திறக்க உதவுவதற்கே. பெரும்பகுதியான சிங்கள மக்களின் நிலைப்பாட்டுக்கு இது மாறானதாகும் .நியாயமான முறையில் செயற்படும் பெரும்பகுதியான சிங்கள மக்கள் தமிழ் மக்களுடன் சமமாக வாழ்வதையே விரும்புகின்றார்கள்.

நாளுக்கு நாள் மக்கள் மாறிக் கொண்டு வருகின்றார்கள்– சிலர் ஆபூர்வமான சிந்தனைகளையும் – புதிய புதிய கண்டுபிடிப்புக்களையும் வெளியிடுகின்றார்கள். சரித்திரம் திரிக்கப்படுகின்றது. சிலர், தமிழர்கள் போர்த்துக்கீசரால் யாழ்ப்பாணத்தில் புகையிலை நடுகைக்காக கொண்டு வரப்பட்டதாக கண்டுபிடித்துள்ளார்கள், மேலும் சிலர் இந்நாடு சிங்களவர்களுக்கு மட்டுமே சொந்தமானதெனவும் அவர்களே இந்த் நாட்டில் வாழ முடியும் என்றும் கூறுகின்றார்கள். இக்கூற்று மிகக் கீழிறங்கி ஒரு விவாதத்தை நடத்த நான் விரும்பவில்லை. 600 இலட்சம் தமிழ் மக்கள் வாழும் தமிழ் நாட்டிலிருந்து யாழ்ப்பாணத்தை 20 மைல் நீளம் கொண்ட பாக்குத் தொடுவாயே பிரிக்கின்றது என்பதை ஒருவர் அறிந்திருந்தால் போதும். யாழ்ப் பாணத்திலிருந்து தமிழ் நாட்டுக்கும் தமிழ் நாட்டிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும் இடைப்பட்ட கடலை பலர் நீந்திக் கடந் துள்ள னர். இரவு போசனத்தை முடித்துக் கொண்டு இந்தியா சென்று ஒரு எம்.ஜி. ஆர் படத்தை பார்த்துவிட்டு அதிகாலை நாடு திரும்பிவிடும் சகோதரர்களைப் பற்றி எனது பள்ளித்தோழர்கள் கூறியிருக்கின்றார்கள். மேலும் 5 ஈஸ்வரன் கோயில்கள், தெவிநுவரவில் உள்ள விஷ்ணு தேவாலயம், கதிர்காமத்து முருகன் போன் றவை சரித்திர காலத்திற்கு முந்தியமிகப் பழமை வாய்ந்த கோவில்களாகும். ஒரு இனத்தையோ ஒரு குழுவையோ சேர்ந்தவனைப் போல அல்லாமல் எப்பொழுதும் நான் எமது பிரச்சினைகளை தேசப்பற்று கொண்ட ஒரு இலங்கையனாகவே நோக்குகின்றேன். இதுவே தேசாபிமானமாகும். அமைதியும் பொறுமையுமே எமது பிரச்சினைகளை தீர்ப்பதற்கு மிகவும் தேவைப்படுகின்ற இவ்வேளையில் நியாயமாக செயற்படும் சிங் களவர்களை கூட தூண்டிவிட்டோ அவமானத்தை ஏற்படுத்தியோ பிரச்சினையை மேலும் சிக்கலடையச்செய்ய நான்விரும்பவில்லை.

தனிச்சிங்களச் சட்டத்தை மைல் கல்லாக வைத்துப்பார்ப்பின் எமது இனப்பிரச்சினை 50 வயதை தாண்டி விட்டது. அந்தக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் உயர் வகுப்புகள் உள்ள பாடசாலைகள் அத்தனையிலும் சிங்கள பட்டதாரிகள், சிங்கள பட்டதாரிகள், சிங்களம் போதிப்பதற்காக நியமிக்கப் பட்டமையினால் இத்தகைய ஒரு சட்டத்திற்கு அவசியம் ஏற்படவில்லை. அப்போது, ஒன்றில் நீர் பிறந்திருக்கவில்லை அல்லது நீர் பால்குடியாக இருந்திருப்பீர். அக்காலத்தில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மற்றும் சிறு குழுக்கள் சமாதானமாகவும் அமைதியாகவும் ஒருவரை ஒருவர் மிகவும் மதித்தும் நேசித்தும் வாழ்ந்தனர். தென்னிலங்கையில் உள்ள ஒரு கோவில் சம்பந்தமாக ஏற்பட்ட ஒரு சிறு சம்பவம் தவிர அது கூட பல ஆண்டுகளுக்கு முன்– அமைதியான எமது நாட் டில் வகுப்புக் கலவரம் என்ற பேச்சுக்கே இடமிருக்கவில்லை. அந்தச் சம்பவத்தில் யார் யார் சம்பந்தப் பட்டார்கள் என்பதை கூட நான் கூற விரும்பவில்லை.

சகல இன மக்களும் அமைதியாக வாழ்ந்த நாட்டுக்கு அழிவைக் கொண்டு வந்ததே தனிச்சிங்களச் சட்டம் தான். அதைக்கூட உரிய நடவடிக்கை எடுக்கும் முயற்சியை சில இனவாதிகள் திட்டமிட்டுக் குழப்பியதாலேயே இந்நிலை ஏற்பட்டது. இல்லையேல் இந்நிலை ஏற்பட்டிருக்காது . அத்தகைய ஒரு சிலர் உலகின் எப்பகுதியிலும் இருக்கத் தான் செய்வார்கள். நீர் குழப்பாது இருந்திருப்பின் மிகப் பிரபல்யமான அஹிம்சை வாதி தந்தை செல்வநாயகம் கியு சி அவர்களால் உருவாக்கப் பட்ட தமிழர் விடுதலைக்கூட்டணி சமாதானமான முறையில் தீர்வு ஒன்றை கண்டிருக்கும்.

ஆனால், அதுவரை யாழ்ப்பாணச் சரித்திரத்தில் இடம்பெறாத ஒரு தீவிர நடவடிக்கையை நீர் எடுத்தமையாலேயே நிலமை மோசமடைந்தது. யாழ்ப்பாணத்தின் முன்னைநாள் மேயராகவும் எம்பியாகவும் இருந்த திரு. அல்பிரட் துரையப்பாவை சுட்டுக்கொன்று துப்பாக்கி கலாசாரத்தை நீர் அறிமுகம் செய்ததாலேயே நிலமை வன்முறைக்கு திரும்பியது. மிகப்பிரபல் யமான தலைவர்களாகிய அமரர் ஜி.ஜி. பொன்னம்பலம், எஸ்.ஜே.வி.செல்வநாயகம் கியு சி ஆகியோரின் தலைமையில் இயங்கிய இரு கட்சிகளின் வேட்பாளர் களையும் யாழ்ப்பாணத்தொகுதியில் தோற்கடித்தமையே அவர் செய்த குற்றமாகும். அரசியலில் மிகவும் பிரபல்யம் அடைந்திருந்த அமரர் அல்பிரட்துரையப்பா பொன்னாலை வரதராஜப்பெருமாள் கோவிலில் தரிசனம் செய்து கொண்டிருந்தவேளை நீர் அவரை சுட்டுக்கொன்றீர். அவரை ஏன் கொன்றீர் என்று உமக்கே தெரியுமோ எனக்குத் தெரியாது.

அன்புடன்

(சி/417)
தமிழர் விடுதலைக் கூட்டணி
1







நெடுந்தீவில், ஊர்காவற்றுறை சுற்றுலா நீதிமன்றம் நேற்று திறந்துவைக்கப்பட்டது. இந்நிகழ்விற்கு விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் இலங்கையின் பிரதம நீதியரசர் அசோக டி சில்வா நாடாவைவெட்டி நீதிமன்ற கட்டிடத்தை திறந்துவைப்பதையும் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா மங்கல விளக்கேற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-ரம்சன்ராஜ்)

# மோட்டார் சைக்கிள்-கன்ரர் விபத்து சங்கரத்தையில் இளைஞன் படுகாயம்



(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை சங்கரத்தைப் பகுதியில் மோட்டார் சைக்கிளும் கன்ரர் ரக வாகனமும் நேருக்கு நேர் மோதி விபத்திற்குள்ளானதில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று நண்பகல் 12 மணியளவில் இடம் பெற்ற இச் சம்பவத்தில் சுழிபுரத்தைச் சேர்ந்த எஸ்.சிவநேசன் (வயது 27) என்ற இளைஞரே காயமடைந்துள்ளார்.

குறித்த இளைஞன் யாழ்.நகரிலிருந்து வீடுநோக்கிச் சென்று கொண்டிருந்தபோது யாழ். நகர் நோக்கி வந்து கொண்டிருந்த கன்ரர் வாகனத்துடன் விபத்திற்குள்ளாகியுள்ளார்.

இச்சம்பவத்தின் போது கன்ரர் வாகனம் அப்பகுதியிலுள்ள வீடொன்றின் மதிலுடனும் மோதுண்டுள்ளது. (ந-14,27)

# மீளக்குடியமர்ந்த குடும்பங்களிற்கான வாழ்வாதார உதவுத்தொகை வழங்குதல்

தேசத்தை கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சினால் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தி திட்டத்தின் நீகோட் ஊடாக மீளக்குடியமர்ந்த குடும்பங்களிற்கு தலா 25 ஆயிரம் ரூபாய் படி வழங்கப்படுகின்ற வாழ்வாதார உதவு தொகை, இதுவரை பெற்றுக்கொள்ளாத குடும்பங்களுக்கு பதினைந்தாவது நாளாக நாளை 22ஆம் திகதி அனுமதிக் கடிதங்கள் கையளிக்கப்படவுள்ளன.

கிராமசேவகர் பிரிவுகளும் அக்கிராம சேவகர் பிரிவுகளில் வசிப்போர் அனுமதிக் கடிதங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டிய இடங்களும் வருமாறு,

**சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவு**

ஜே/288, ஜே/289, ஜே/290,ஜே/291, ஜே/292,ஜே/293, ஜே/294,ஜே/295, ஜே/296, ஜே/297,ஜே/298, ஜே/300,ஜே/301, ஜே/302, ஜே/303,ஜே/304, ஜே/305, ஜே/306,ஜே/307, ஜே/308, ஜே/309,ஜே/310, ஜே/311, ஜே/312,ஜே/313, ஜே/314, ஜே/315,ஜே/316, ஜே/317, ஜே/318,ஜே/319, ஜே/320, ஜே/322,ஜே/323, ஜே/324, ஜே/325, ஜே/326, ஜே/327, ஜே/328,ஜே/329, ஜே/331, ஜே/332, ஜே/334, ஜே/335,ஜே/336, ஜே/337, ஜே/338, ஜே/339, ஜே/340, ஜே/341, ஜே/342, ஜே/343,ஜே/344, ஜே/345,ஜே/346,ஜே/347 காலை 9 மணி சாவகச்சேரி கலாசார மண்டபம்.

**உடுவில் பிரதேச செயலக பிரிவு**

ஜே/182, ஜே/183, ஜே/184, ஜே/185,ஜே/186, ஜே/187, ஜே/188, ஜே/189, ஜே/190, ஜே/191, ஜே/192,ஜே/193,ஜே/194,ஜே/195, ஜே/196, ஜே/197 காலை 9 மணி உடுவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபம்.

ஜே/198, ஜே/199, ஜே/200, ஜே/201, ஜே/202, ஜே/203, ஜே/204, ஜே/205, ஜே/206, ஜே/207, ஜே/209, ஜே/210, மதியம் 2 மணிக்கு உடுவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபம். (ந-14,3)

# சடலத்தை பொறுப்பேற்கவும்

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு சந்நிதி கோவில் பகுதியில் அனாதரவாகக்கிடந்த முதியவர் ஒருவரது சடலம் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலை யில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இச்சடலத்திற்குரியவர் முருகு பாலசிங்கம் (வயது 72) தேசிய அடையாளஅட்டை இலக்கம் 381362418V என அடையாளங் காணப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள வைத்தியசாலை பொறுப்பதிகாரி, இவரது உறவினர்கள் சடலத்தை அடையாளங்காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுள்ளார். (ந-14,9)

# வோர்ன் அணிக்கு முதலாவது வெற்றி

(அகமதாபாத்)

சகல துறையிலும் ஜொலித்த ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 34 ஓட்டங்கள் வித்தியாசத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியை வீழ்த்தியது.

இந்தியாவில் நடைபெற்று வரும் இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) இருபது-20 கிரிக்கெட் தொடரில் நேற்று அகமதாபாத்தில் நடைபெற்ற லீக் சுற்றின் 13ஆவது போட்டியில் வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் கங்குலி தலைமையிலான கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியும் மோதின.

இப்போட்டியில்நாணயச்சுழற்சியில்வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களையிழந்து 168 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஜகன்ஜகன்வல 36 பந்துகளில் (5 பவுண்டரிகள் அடங்கலாக) 45 ஓட்டங்களையும் வோக்ஸ் ஆட்டமிழக்காமல் 22 பந்துகளில் (2 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 37 ஓட்டங்களையும் பைகால் 31, ஓஜா 27 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் டின்டா, இஷாந்த் சர்மா மற்றும் ஷேன் பொன்ட் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களையிழந்து 134 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 34 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் ஹோட்ஜ் 34 பந்துகளில் (3 பவுண்டரிகள் அடங்கலாக) 36 ஓட்டங்களையும் அணித்தலைவர் கங்குலி 29 பந்துகளில் (3 பவுண்டரிகள் அடங்கலாக) 33 ஓட்டங்களையும் புஜாரா 29, ஷா ஆட்டமிழக்காமல் 19 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் யூசுப் பதான் 2 விக்கெட்டுக்களையும் முனாப் பட்டேல், திரிவெடி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப்போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் ஜகன்ஜகன் வெல ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி தான் விளையாடிய 4 ஆவது போட்டியில் முதலாவது வெற்றியைப் பெற்று 2 புள்ளிகளைப் பதிவு செய்தது.

இதேவேளை கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி தான் விளையாடிய 4 ஆவது போட்டியில் இரண்டாவது தோல்வியைச் சந்தித்தது.

# பெங்களூர் அணியிடம் மும்பை அணி வீழ்ந்தது

(மும்பை)

ஜக் கலிஸின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் மும்பை இந்தியன்ஸ் அணியை இலகுவாக வீழ்த்தியது.

இந்தியாவில் நடைபெற்றுவரும் ஐ.பி.எல். இருபது-20 கிரிக்கெட் தொடரில் நேற்று மும்பையில் நடைபெற்ற லீக் சுற்றின் 14ஆவது போட்டியில் டெண்டுல்கர் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியும் கும்ளே தலைமையிலான பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களையிழந்து 151 ஓட்டங்களை எடுத்தது.

இதில் திவாரி 21 பந்துகளில் (2 பவுண்டரிகள் அடங்கலாக) 25 ஓட்டங்களையும் அணித்தலைவர் சச்சின் டெண்டுல்கர் 22 பந்துகளில் (4 பவுண்டரிகள் அடங்கலாக) 25 ஓட்டங்களையும் சதீஸ் 24, சகீர்கான் ஆட்டமிழக்காமல் 9 பந்துகளில் (3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர்கள் அடங்கலாக) 23 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஸ்ரையன், வினய்குமார் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் பிரவீன் குமார், ஜக் கலிஸ், அனில் கும்பிளே ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி கலிஸ்-பாண்டி ஜோடியின் அதிரடி ஆரம்பத்தின் மூலம் 19.1 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 155 ஓட்டங்களைக் குவித்து 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதில் ஜக்கலிஸ் ஆட்டமிழக்காமல் 55 பந்துகளில் (10 பவுண்டரிகள் அடங்கலாக) 66 ஓட்டங்களையும் பாண்டி 27 பந்துகளில் (3 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 40 ஓட்டங்களையும் ஹோலி 12 பந்துகளில் (2 சிக்ஸர்கள் அடங்கலாக) 17 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் சகீர்கான், ஹர்பஜன் சிங் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி தான் விளையாடிய நான்காவது போட்டியில் மூன்றாவது வெற்றியைப் பெற்று 6 புள்ளிகளுடன் முதலிடத்தைப் பிடித்தது.

இதேவேளை மும்பை இந்தியன்ஸ் அணி தான் விளையாடிய மூன்றாவது போட்டியில் முதலாவது தோல்வியைச் சந்தித்தது.

## சனல்-4...

குறித்துத் தனியான விசாரணைகள் நடத்தப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர் ஒருவர் ஊடகங்களுக்கு இவ்வாறான கடிதங்களை அனுப்பி வைக்க முடியாது.

எப்படி சரத் பொன்சேகா சனல்-4 தொலைக்காட்சிக்குக் கடிதம் அனுப்பி வைத்தார் என்பது பற்றிய விசாரணையில் முக்கிய கவனம் செலுத்தப்படும்.

இது குறித்து பொன்சேகாவிடம் விசாரணை நடத்தப்படும் எனவும் ஹுலுகல்ல தெரிவித்தார். (ந-5)

நூலகத்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.



## ஐ.நாவுட...

நிபுணர் குழு ஒன்றை நியமிக்கவிருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் பான் கீ மூன் அறிவித்திருந்தார்.

எனினும் இதனை இலங்கை அரசாங்கம் நிராகரித்ததுடன் 118 உறுப்பு நாடுகளைக் கொண்ட அணி சேரா நாடுகளும் இதற்கு எதிரான கருத்தை வெளியிட்டிருந்தன.

இதனையடுத்து ஐக்கிய நாடுகள் சபைக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டதாகக் கருத்துக்கள் வெளியாகின.

இதற்கிடையில் இந்தச் செவ்வியில் கருத்துத் தெரிவித்துள்ள பாலித ஹோகன்ன, உறவில் விரிசல் ஏற்படும் என்று தம்மால் கருத முடியவில்லை எனக் குறிப்பிட்டதுடன்,

ஐக்கிய நாடுகள் சபையுடன் இந்த விடயம் தொடர்பில் தொடர்ந்து பேச்சு நடத்த ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதி இலங்கை வருவார் என்றும் தெரிவித்தார். (ந-5)

## ஓ.எல்.பரீட்...

ஆயிரம் தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் அடங்குவர்.

பாடசாலை பரீட்சார்த்திகளில் 3 இலட்சம் பேர் முதல் தடவையாக இவ் வருடம் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர். (ந-5)

## அனோமா...

புலனாய்வுப் பிரிவினர் ஏற்கனவே அறிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும் என்ன விடயம் தொடர்பில் இந்த விசாரணை நடத்தப்பட உள்ளதென்பது குறித்து அறிவிக்கப்படவில்லை என ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

தனது கணவர் இராணுவக் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளதனால் அனோமா பொன்சேகா கணவரின் சார்பில் பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இன்று குற்றப் புலனாய்வுப் பிரிவினரை அனோமா பொன்சேகா சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ந-5)

## பதவி விலகி ஆறு மாதங்...

இல்லாத நிலையினையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சரத் பொன்சேகா நான்கு நட்சத்திர தரம் பெற்ற ஜெனரல். அவரைக் கைது செய்வதானால் அதற்கான உத்தரவை அவரை விட உயர்ந்த தரம் கொண்ட அதிகாரி ஒருவர் விடுத்திருக்க வேண்டும்.

எனினும் அவ்வாறான உயர் அதிகாரி ஒருவர் தற்போது இல்லை. இதனை அண்மையில் அமைச்சர் டலஸ் அழகப்பெருமவும் ஒப்புக் கொண்டிருந்தார்.

சரத் பொன்சேகாவின் கைது சட்டத்துக்கு முரணானது எனவும் அந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்க வேண்டிய முறைகள் குறித்தும் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவும் கருத்துத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## பொதுத்...

நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலினைத் தொடர்ந்து எமது குழு அங்கு விஜயத்தை மேற்கொள்ளும். அதன் பின்னர் புதிய நாடாளுமன்றத்தின் வரவு-செலவுத் திட்டத்தின் அடிப்படையில் நிதி வழங்குவது தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-5)

## அணிசேரா நாடுகள்...

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் மனித உரிமைகள் விவகாரம் குறித்து ஆலோசனைக்குழுவை அமைக்கும் அதிகாரங்களைக் கொண்டவர். எனவே அவர் ஆலோசனைக் குழுவை அமைப்பது ஏற்புடையது என ஐ.நாவுக்கான பிரித்தானியாவின் நிரந்தர பிரதிநிதி மார்க் லியால் கிராண்ட் தெரிவித்துள்ளார்.

ஆனால் பான் கீ மூனுக்கு அந்த அதிகாரங்கள் இல்லை என வாதிட்டு வரும் அணி சேரா நாடுகள் அமைப்பின் கூற்றுக்கள் எமக்கு ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தியுள்ளன.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் மனித உரிமை மீறல்கள் நிறுத்தப்பட வேண்டும். அங்கு மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றங்கள், வன்முறைகள் போன்றன தொடர்பில் முழுமையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதில் பிரித்தானியா தெளிவாக உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ந-5)

காணி விற்பனைக்கு

யாழ். நகருக்கு சுமார் 4KM தூரத்தில் நல்லூர் கோவிலுக்கு அண்மையிலும் கல்வியங்காடு 3ஆம் கட்டை வீதியில் பாதுகாப்பு மிக்க அமைதியான சூழலில் தூய்மையான குடி தண்ணீர் உள்ள இரண்டு வீடுகள் கட்டக்கூடிய சுமார் 4 3/4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. விரும்பினால் இரண்டாகவும் பிரித்து கொடுக்கப்படும்.

உடன் தொடர்புகளுக்கு:-
077 2469015, 077 0711512, 077 6081693

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்
றோயல் குளுக்கோஸ்
100% சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்
PACKED BY:
ROYAL Industries
Colombo- 12
T.P 0777277670
அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்;
சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தெ.பே 021 222 2567
(சி-4698)

இலவசம்
அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!
எம்மிடம் 18 டசின் றோயல் குளுக்கோசினைக் கொள்வனவு செய்து 1000 ரூபாய் பெறுமதியான அழகிய வர்ண ரீ-சேட் ஒன்றினை முற்றிலும் இலவசமாய் பெற்றுக்கொள்ளவும்.

பாராளுமன்றப் பொதுத் தேர்தல் - 2010
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்



பேராசிரியர்
இரா.சிவசந்திரன்
எமக்கான
அபிவிருத்தியைப் பேணுவதற்கும்
அபிவிருத்தி செய்வதற்கும்
அரசியல் பலம் தேவை
(சி-4727)
இலங்கைத் தமிழரசுக் கட்சி
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (TNA)
5
நாமும் வாக்களிப்போம் நம்மவரையும் வாக்களிக்க வைப்போம்

பாராளுமன்ற பொதுத் தேர்தல் 2010
தமிழ் தேசியக் கூட்டமைப்பு
அடையாளங்களை ஆக்கிரமிக்கும்
சூழ்ச்சிகளை முறியடித்து
பூர்வீக வாழ்வை தொடர-நம்
உரிமைகளை உறுதிசெய்வோம்!
X
10 X
(சி-4714)
இலங்கைத் தமிழரசுக் கட்சி
சிவஞானம் சிறீதரன்
கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலய (கனிஸ்ரா) அதிபர்



தமிழர் விடுதலைக் கூட்டணி



X
வெற்றுக் கோசங்கள் வேண்டாம்
வீழ்ந்த மக்களுக்கு கரம் கொடுப்போம்
வீ.ஆனந்தசங்கரி
1



ஏழாலை க.திருஞானசம்பந்தர் J.P
(Ret. Station Master)
3
(சி-4716)

பாராளுமன்றப் பொது தேர்தல் 2010
தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி
"சலுகைகளுக்கு விலை போகும்;
அழுத்தங்களுக்கு மண்டியிடும்,
எமது விடிவிற்கான பயணத்தில்
அவ நம்பிக்கை கொண்டவர்களை
தோற்கடிப்போம்."
(சி-4709)



செல்வராசா கஜேந்திரன்
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
முன்னாள் யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர்
X 12
அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்

பாராளுமன்றத் தேர்தல்-2010
தமிழ் தேசியத்திற்கான மக்கள் முன்னணி



பிரான்சிஸ் வின்சென்ட்போல்
(அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர்-
பருத்தித்துறை நகரசபை முன்னாள் உப தலைவர்)
இன்னல்கள் எதுவரினும் மண்ணுக்காக மக்களுக்காக தன் வாழ்நாளை சேவையாகக் கருதி வாழ்ந்து வரும் மறத் தமிழன்
பிரான்சிஸ் வின்சென்ட்போல்
அவர்களுக்கே உங்கள் கண்ணான வாக்குகளை
வாரி வழங்கிடுவீர்
X 6
(சி-4715)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.03.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.